# தமிழரசு

1-8-1985 75 காசு.





தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் கூட்டம் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் தலைமையில் 29.6.1985 அன்று கிண்டி ராஜ்பவனில் நடை பெற்றது. மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் நிகழ்ச்சியில் பங்குபெற்றார்.



நெல்லை மாவட்டம் சாத்தான் குளத்தில் குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் 18.5.85 அன்று அடிக்கல் நாட்டினார்.

ம் மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறத் ம் பற்கள் சுகாதார ஆய்வுக்காக மத்திய அரசு த்துள்ள ரு 3. லட்சத்து 16 ஆயிரத்து 500 ய்க்குரிய காசோலையை மாண்புமிகு மக்கள் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ன்டே அவர்கள், சென்னை பல்மருத்துவக் லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜனிடம் ங்கினார்.



# முதல்வரின் ஜப்பான் பயணம்


தமிழக அரசின் 'பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் நிலக்கரி இறக்குமதி செய்வதற்கென ஜப்பான் நாட்டிலுள்ள 'ஹிடாச்சி' நிறுவனத்திலிருந்து ரூ. 24.5 கோடிக்குக் கப்பல் ஒன்றை வாங்கவிருக்கிறது.

இதற்கென மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் (26-7-85) ஜப்பான் நாட்டுக்குப் பயணமானார்.

ஆகஸ்டு மாதம் 2-ஆம் நாளன்று, தமிழ்நாடு அரசு வாங்கவிருக்கும் கப்பல் ஒப்படைப்பு நிகழ்ச்சி ஜப்பானில் உள்ள ஒசாகா துறைமுகம் அருகே நடைபெறவிருக்கிறது. அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கப்பலைப் பெற்றுக் கொள்வார்.

சென்னையிலிருந்து டில்லி வழியே ஜப்பான் செல்லும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன், அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மையார், மாண்புமிகு மின்துறை அமைச்சர். திரு எஸ். இராமச்சந்திரன், அவரது துணைவியார் திருமதி சாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவரது துணைவியார் திருமதி ஜெயலட்சுமி மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனி மருத்துவர் திரு பி.ஆர். சுப்பிரமணியம், நரம்பியல் மருத்துவ நிபுணர் டாக்டர் நரேந்திரன், மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைச் செயலாளர் திரு பிச்சாண்டி ஆகியோர் உட்பட பதின்மூன்று பேர் உடன் சென்றனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும், தாய்மார்களும் அதிகாலை 3மணி முதலே விமான நிலையத்தில் கூடியிருந்தனர். கதிர்வரும் நேரத்தில்- அதாவது சரியாக 5-30-க்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்.




**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆடி 17

மலர் : 16 இதழ் : 3

1-8-1985

அவரை வரவேற்கவும் வழி யனுப்பி வைக்கவுமெனச் சர்வ தேச விமானங்கள் வந்து செல்லும் பழைய விமான நிலையத்தின் கிழக்குப் பகுதியில் மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இல்லத்திலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவர்தம் துணைவியாரும் காரில் அங்கு வந்து இறங்கியதுமே - 'பொன்மனச் செம்மல் வாழ்க''—''புரட்சித் தலைவர் வாழ்க'' ''முப்பிறவி கண்ட முதல்வர் வாழ்க''''மக்கள் திலகம் வாழ்க'' என்றெல்லாம் பலவாறான வாழ்த்து முழக்கங்கள் கூடியிருந்தோரால் மண்ணதிர எழுப்பப்பட்டன.

அவர்களை நோக்கிச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களது வாழ்த்துக்கு நன்றி தெரிவித்து விட்டு விமான நிலையத்தினுள் அடி வைத்தார்.

இலவசச் சத்துணவு உண்ணும் குழந்தைகள் சிலர் முதன்முதல் முத்துநகை பொங்க, சித்தம் களித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாலை அணிவித்து வணங்கினர்.

பின்னர் - அரசு தலைமைச் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் மாலையணிவித்தார்.

அதைத் தொடர்ந்து வரிசையுற நின்றிருந்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன், துணைத் தலைவர் திரு வி.பி. பாலசுப்பிரமணியம், மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. துணைத் தலைவர் திரு ஜி. சுவாமிநாதன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் நாடாளுமன்ற—சட்டப் பேரவை-மேலவை உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மாத்யூ, அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகப் பொதுச் செயலாளர் திரு எஸ். இராகவானந்தம், துணைப் பொதுச் செயலாளர் திரு எஸ். ஆர். இராதா, பொருளாளர் திரு செ.மாதவன் ஆகியோரும்—தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பழனியாண்டி, திரு. எம்.பி. சுப்பிரமணியம், மற்றும் அக்கட்சி மேலவை உறுப்பினர் திரு ஏ. ஜே. தாஸ், திரு டி.பி. ஏழுமலை ஆகியோரும், அரசு உயர் அதிகாரிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஏராளமான மாலைகளும், சால்வைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்தார்கள்.

மேதகு தமிழக ஆளுநர் சார்பில் அவரது பாதுகாப்பு அதிகாரி கேப்டன் திரு எம். எம். ஷா, மலர்ச்செண்டு ஒன்றினை வழங்கினார்.

எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு 5-50க்கு விமான நிலையத்தினுள் நிறுத்தப்பட்டிருந்த தமது டி.எம்.க்யு 4777 'ஆப்பிள் கிரீன்' வண்ணக் காரில் தமது துணைவியாருடன் அமர்ந்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

'தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பென இருள் தன் கட்டுக் குலையும் அந்த வேளையில் '**Follow me**' என்று பின்னால் விளக்கொளியால் எழுதப்பட்ட விமான நிலைய 'வேன்' ஒன்று, புதிதாய் அமைக்கப்பட்ட உள்நாட்டு விமான நிலையத்திற்கு இந்தக் காரை வழிகாட்டி அழைத்துச் சென்றது.

டில்லி செல்லும் விமானத்தில் மற்றவர்களெல்லாம் முன்



கூட்டியே ஏறி அமர்ந்திருக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறி நின்று கையசைத்து எல்லோரிடமும் இளநகை பூக்க விடை பெற்றார்.



## டில்லியில்....

சென்னையை விட்டு காலை 6.10க்குப் புறப்பட்ட அந்த விமானம் - 9-55க்கு டில்லி போய்ச் சேர்ந்தது.

தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்க அங்கு சென்றிருந்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, நாடாளுமன்றத் துணைச் சபா நாயகர் திரு தம்பிதுரை, நாடாளுமன்ற அனைத்திந்திய அண்ணா தி.மு.க. குழுத் தலைவர் திரு இரா. மோகனரங்கம், மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் - தொண்டர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றவர்களையும் விமான நிலையத்தில் மகிழ்ந்து வரவேற்றார்கள்.

அங்கிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றோரும் 'தமிழ்நாடு இல்லம்' சென்று தங்கினர்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் திரு ஜி.கருப்பையா மூப்பனார் அவர்கள், அங்குவந்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் பயணம் எல்லா வகையிலும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துத் தெரிவித்தார்.

அன்று (26-7-85) மாலை— டில்லியில் மாண்புமிகு இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மத்திய அரசின் கொள்கை வகுப்புக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோரையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

வெள்ளிக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் டில்லி விமான நிலையத்திலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றோரும் ஜப்பான், நாட்டின் தலைநகரான டோக்கியோவுக்குப் பயணம் ஆயினர்.

## ஜப்பானில் :

இந்திய நேரப்படி அவர்கள் சனிக்கிழமை பகல் ஒரு மணியளவில் டோக்கியோவைச் சென்றடைந்தார்கள். ஜப்பான் வாழ் தமிழர்களும் இந்தியத் தூதரக அதிகாரிகளும், ஜப்பானிய அதிகாரிகளும் விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றவர்களையும் அன்போடு வரவேற்றார்கள்.

டோக்கியோவில் உள்ள ஒட்டோவா ஒட்டலில் மாண்புமிகு முதல்வர் முதலானோர் சென்று தங்கினர்.

ஜப்பான் நாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10நாட்கள் தங்கியிருப்பார். அப்போது, அங்குள்ள நரம்பியல் நிபுணர் டாக்டர் கானு அவரது உடல் நலத்தைப் பரிசோதிப்பார்.

ஜப்பான் பல்கலைக் கழக மருத்துவமனைத் தலைமைப் பேராசிரியரான டாக்டர் கானு, மத்திய ஜப்பானில் உள்ள நகோயா நகர் அருகே— புஜிதாக்குயென் என்ற ஊரில் வசித்து வருகிறார் - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்அங்கு சென்றே டாக்டர் கானுவைச் சந்திக்கவிருக்கிறார்.

## முதல்வர் பொறுப்புகள்..

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகம் திரும்பும்வரை-அவர் வகித்து வந்த பல்வேறு துறை பொறுப்புகளை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு செய்தி - அறநிலைத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் ஆகியோர் ஏற்றுப் பணியாற்றுவார்கள்.

பொது நிர்வாகம், ஐ.ஏ.எஸ். மற்றும் அனைத்திந்திய சர்வீஸ்கள் ஆகிய துறைகளின் பொறுப்பை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூடுதலாக வகிப்பார்.

மதுவிலக்கு, எக்சைஸ், பாஸ்போர்ட் வழங்கல், மொலாசஸ் விநியோகம், தோல் பொருள் ஆய்வு ஆகிய துறைகளின் பொறுப்பை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கூடுதலாக வகிப்பார்.

காவல் துறை, லஞ்ச ஒழிப்பு, மாவட்டவருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியர், திட்டம் ஆகிய துறைகளின் பொறுப்பைக் கூடுதலாக மாண்புமிகு செய்தி-அறநிலைத் துறை அமைச்சர் அவர்கள் வகிப்பார்.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களின் துறைப் பொறுப்புகள், மாண்புமிகு சட்ட அமைச்சர் திருசி.பொன்னையன் அவர்களிடமும் - மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்களின் துறை பொறுப்புகள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச்செய்திகளை அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

—இல. இராசேந்திரன்



# வண்டலூரில் உயிரியல் பூங்கா

முதன் முதலில் 140 ஏக்கர் பரப்பளவில் மூன்று கோடி ரூபாய் செலவில் அமைப்பதெனக் கருதப் பட்டு-பின்னர், பல்வேறு தனிச் சிறப்புகளோடு உருவாக்கக் கருதி 510 எக்டேர் பரப்பளவில் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் வண்டலூரில் அமையும் 'அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா' மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் (24-7-85) திறந்து வைக்கப் பட்டது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு செய்தி அறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்.

சிங்கம், புலி, கரடி, குரங்கினம், நீர்யானை போன்ற 28 வகை மிருகங்கள் 205-ம், 61 வகைப் பறவைகள் 353ம், 8 வகை ஊர்வன வகைப் பிராணிகள் 32ம் இப்பூங்காவில் உள்ளன. கடந்த ஆண்டில் மட்டும் 168 வகைப் பிராணிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. உலகிலேயே மிகவும் அரிதானதாகவும் அழியக்கூடிய நிலையில் உள்ளதெனக் கருதப்படுபவைகளுமான - காண்டாமிருகம், மணிப்பூர் தாமின் மான், காட்டெருமை, சிங்கவால் குரங்கு, காட்டுநாய், ஆஸ்திரேலியப் பறவைகளான கருப்பு அன்னப் பறவை-வெள்ளைக்கிளி, ஐரோப்பிய கருப்புக் கழுகு, ஆப்பிரிக்கக் கொண்டைக் கொக்கு, பஞ்சவர்ணக் கிளி போன்ற மிருகங்களும் பறவைகளும்கூட இங்குள்ளன.


மலைச்சரிவில் இயற்கைத் தாய் எழில் பரப்பியிருக்கும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வனவளம் மிக்கதாயினும் புதிதாக-நிழல்தரும் மரங்களும், தீவன மரங்களும் பழமரங்களும் 51,776 நடப்பட்டுள்ளன. வேலிச் செடிகளும் பூங்காச் செடிகளும் ஒரு லட்சத்திற்குமேல் நடப்பட்டுள்ளன. தீவனப் புல் வகைகள் மட்டும் 9 எக்டேர் பரப்பளவில் நடப்பட்டுள்ளன.

இத்தனை சிறப்புடைய இந்த ஏற்றமிகு பூங்கா திறப்பு விழாவோடு புதிய வழித்தடங்களில் செல்லவிருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகள், புதுப்பிக்கப்பட்ட பல்லவன் போக்குவரத்துக்கழகப் பேருந்துகள் வெள்ளோட்ட விழாவும் இணைத்து நடத்தப் பட்டது.

இந்தப் பேருந்துகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இயக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் ஆகியோருடன் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. ஆனூர் ஜி. ஜெகதீசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி மற்றும் அமைச்சர் பெருமக்களும் சட்டப் பேரவை மேலவை - நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பேரறிஞர் அண்ணா படம் அலங்கரித்த-வண்ண விளக்குகள் ஒளிசிந்திய மேடைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரும் போது மாணவ மாணவிகள் மலர் தூவி வரவேற்றனர். வேட்டு முழக்கம் விண்ணைப் பிளக்க, லட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் வாழ்த்து முழக்கம் அதையும் மிஞ்சுவதாயிருந்தது.



வனத்துறைத் தலைமை கன்சர்வேட்டர் திரு எஸ். கொண்டாஸ் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர், ''இந்த உயிரியல் பூங்கா அமைப்புப் பணி இவ்வளவு சிறப்பாக முழுமை பெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆர்வமும் அக்கறையும்-மாண்புமிகு செய்தி அறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுமே காரணம்'' என்றார்.

செங்கை மாவட்ட அனைத்திந்திய அண்ணா தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் திரு. இரா. மோகனரங்கம், திரு. ஜெகத்ரட்சகன் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உலக உருண்டை நினைவுச் சின்னம் பரிசளித்தனர். அண்ணா உயிரியல் பூங்கா அமைந்துள்ள திருப்போரூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு வே. தமிழ்மணி வெள்ளி மயில் நினைவுச் சின்னம் வழங்கினார்.

அ.இ.அ.தி.மு.க. செயலாளர் திரு. முனிரத்தினம் மற்றும் செங்கற்பட்டு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொது மக்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்றும் அமைச்சர்களுக்கும் ஏராளமான கைத்தறி ஆடைகளும் சால்வைகளும் மாலைகளும் அணிவித்து மகிழ்ந்தனர்.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் சீருடை அணிந்த ஐந்து சிறுவர் சிறுமிகளுக்குப் பூங்கா நுழைவுச் சீட்டுகளை வழங்கி, விற்பனையைத் துவக்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து - புதிய 95 பேருந்துகளின் இயக்கத்தையும் தொடங்கி




வைத்தார். இப்பேருந்துகளில் சில, 'வீடியோ' கருவி உடைய்தாக இருந்தன.

இதன்பின், விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

திரு. ஜெகத்ரட்சகன் எம்.பி., நாடாளுமன்ற அ.இ.அ.தி.மு. கழகக் குழுத் தலைவர் திரு. இரா. மோகனரங்கம் எம்.பி., சட்ட மன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திருமதி டி. யசோதா, குறளரசு திரு ஜெயபாரதி எம்.எல்.ஏ., ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் ஜி. ஜெகதீசன் அவர்கள் தமது உரையில் செங்கற்பட்டு மாவட்ட மக்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுவதாகவும், மிகக் குறுகிய காலத்திலேயே செய்யப்பட்டதானாலும் விழா ஏற்பாடு செய்யக் காரணமான அனைவரையும் வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.





மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. க. முத்துசாமி அவர்கள் பேசுகையில்—''இந்தியாவிலேயே முதன்முறையாக 44 சொகுசு இருக்கைகள் கொண்ட ஏர்கண்டிஷன் பஸ் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சார்பில் செயல்பட உள்ளது. நாம் முதன் முதலாக வாங்குவதால் எட்டரை இலட்சம் ரூபாய் பஸ்சை நமக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்குத் தந்திருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் பழைய பஸ்களுக்குப் பதில் 350 புதிய பஸ்கள் விடப்படும்'' என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு செய்தி — அற

நிலையத் துறை மற்றும் வனத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

வரலாற்றிலேயே இடம்பெறத் தக்க சிறப்புமிகு நிகழ்ச்சியை இங்கே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

1972-73-ல் இந்த உயிரியல் பூங்கா அமைக்கத் திட்டமிடப் பட்ட போதிலும் நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தான் இதற்கு இறுதி வடிவம் தரப்பட்டது. கிழக்காசியா விலேயே சிறந்ததாக இதுஅமைய வேண்டும் என்று எண்ணி இதற் கென ஏழு கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். இதுவரை 4 கோடி ரூபாய் செலவிடப்பட் டுள்ளது. இன்னும் 3 கோடி ரூபாய் இதன் சிறப்புக்கெனச் செலவிடப்பட்டு, இப்பூங்காவின் முதற்கட்டப்பணிகள் இன்னும் இரண்டாண்டில் முடிவடையும்.

இப்போது கிழக்காசியா விலேயே சிறந்ததாக விளங்கும் இப்பூங்கா—விரைவில் ஆசியா விலேயே சிறந்ததாகத் திகழும்.

மாண்புமிகு முதல்வர்அவர்கள் நலமாக இருந்தால் எனக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கு, தென்னிந்தியாவுக்கு, இந்தியா வுக்கு வலிவாக இருக்கும் என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்நள் இங்கே நம் முதல்வர் அவர்களைக் காண வந்தபோது கூறிச் சென்றார். அம்மையாரின் அந்த வாழ்த்து இன்று பலித் திருக்கிறது விளங்கிக்கொண் டிருக்கிறது.

இந்த அரசு நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்று கிறதே தவிர வளர்ச்சித் திட் டங்கள் எங்கே என்கிறார்கள் சிலர். இந்த அரசு நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்றும்; இப்படிப்பட்ட வளர்ச்சித் திட் டங்களையும் நிறைவேற்றும்.

—இவ்வாறு செய்தி அறநிலை யம் மற்றும் வனத்துறைஅமைச் சர் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவை முன்னிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர் களின் இல்லம் உள்ள இராமா வரத்திலிருந்து வண்டலூர் வரை சாலையின் இருமருங்கும் கொடிகள், தோரணங்கள் கட்டப் பட்டு ஒலிபெருக்கிகள் இசையை முழக்கிக் கொண்டிருந்தன.

தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் மூலம் இப்பூங்காவில் 1985 மார்ச் முடிய ரூ. 71 இலட்சம் மதிப்புள்ள 24 பணிகள் முழுமையாகச் செய்து முடிக்கப் பட்டுள்ளன. நடப்பு ஆண்டில், ரூ. 57 இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில் அமைக்கும் பணி உட்பட 8 பணிகள் முறைப்படுத் தப்பட்டுள்ளன.


நாதசுர இசை நிகழ்ச்சியோடு ஆரம்பமான விழாத் தொடக்கத் தில், மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் - வனத்துறை தலைமை கன்சர்வேட்டர் திரு எஸ். கொண்டாஸ், செங்கற் பட்டு மாவட்ட ஆட்சித் தலை வர் திரு மாத்யூ இ.ஆ.ப., ஆகி யோர் மாலையணிவித்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர்அவர்கள் ஆண்குழந்தை ஒன்றுக்கு 'சேரன் செங்குட்டுவன் என்றும் பெண் குழந்தையொன் றுக்கு 'சத்யா' என்றும் பெயர் சூட்டினார்.

விழா முடிவில் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்க இயக்கு நர் திரு எஸ். சுப்பராயலு நன்றி கூறினார்.

அதன் பின் கங்கை அமரன் குழுவினர் இசை நிகழ்ச்சி நடை பெற்றது.

—இந்திரன்



இரண்டாவது கட்டப் பணி களைச் செயல்படுத்துவதென 2,500 எக்டர் நிலம் அரசால் கையகப் படுத்தப்பட்டுள்ளது. இங்கே விலங்குகள் சுதந்திரமாகச் சுற்றித் திரியவும், அவற்றைக் கூண்டுக்குள்ளேயிருந்து மக்கள் வேடிக்கை பார்க்கவுமான புதிய நிலைமை அந்த இரண்டாவது கட்டப் பணியிலே நிறைவேற்றப் படும். இப்போது ஆப்பிரிக்கா வில்தான் இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உயிர்களிடத்திலே அளவற்ற அன்பு கொண்டிருந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள் என்பதால், அவர்களுடைய பெயரே நமது புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைப்படி இப்பூங்காவுக்கு இடப்பட்டுள்ளது.

## முதல் அட்டை

சென்னைக்கு 15-7-85ல் வருகை புரிந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் தம்பதியருடன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். தம்பதியர்.

## நான்காம் அட்டை

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான 15-7-85ல் சென்னை அண்ணா சாலையில் உள்ள காமராஜர் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.




இலங்கைச் சிறையில் மரணமடைந்த விடுதலைப் போராட்ட வீரர்களான குட்டிமணி, தங்கதுரை ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளன்று சென்னையில் அவர்களது குடும்பங்கள் வசித்துவரும் இல்லங்களுக்கு மாண்புமிகு முதலவர் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் (25-7-85) சென்று, அவ்விடுதலை வீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



# மக்கள் தலைவர்

மேதகு குடியரசுத் துணைத் தலைவர்

## திரு. ஆர். வெங்கட்ராமன்

நேருவுக்குப் பின்னர் இந்தியாவில் குழப்பம் மிகுந்து, ஜனநாயகம் அழிந்துவிடும் என்ற ஒரு கருத்து, உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தது. இந்தியாவின் நெருங்கிய நண்பர்கள் எனக் கருதப்படும் தலைவர்களிடம் கூட இந்தச் சந்தேகம் இருந்தது. அந்தச் சந்தேகத்தையெல்லாம் போக்கி, நெருக்கடி நேரத்திலும் சிதறாமல், தளராமல் எழுந்து நிற்கும் சக்தி வாய்ந்த நாடு பாரதம் என்பதை, அமைதியான முறையில், ஏகமனதாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் காட்டினோம். அப்படி ஓர் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியவர் தலைவர் காமராஜ் அவர்கள் தான் என்பது உலகறிந்த உண்மை. இந்த நாட்டில் ஜனநாயகம் தடை பெறாமல் தொடர்ந்து நடைபெறும் என்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டினார் காமராஜ்.

ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் அவர்கள், டெல்லியில் காமராஜ் அவர்களைச் சந்தித்துத் தம் நாட்டுக்கு வருமாறு அழைத்தபோது காமராஜ் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

மாஸ்கோ செல்வதற்கு முதல் நாள் டெல்லியில் ஒரு விருந்து ஏற்பாடாகி இருந்தது. விருந்தளித்தவர் ரஷ்ய நாட்டின் இந்தியப் பிரதிநிதி. அதற்கு, யூகோஸ்லேவியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லேவேகியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அந்த விருந்தில், ரஷ்யப் பிரதிநிதி என்னிடம், ''காமராஜ் அவர்களுக்கு விசேஷ விருப்பம் ஏதாவது உண்டா? குறிப்பிட்ட ''பொழுது போக்கு'' ஏதாவதில் அவர் அக்கறை கொண்டுள்ளாரா? ரஷ்யாவில் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளதைத் தவிர, அவர் ஏதாவது காண விரும்புகிறாரா'' என்று கேட்டார்.

நான் யோசித்துப் பார்த்தேன். காமராஜ் அவர்களுக்கு என்ன ஹாபி? என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ''அவர் பொழுதெல்லாம் மக்களைப் பற்றிய சிந்தனையில்தான் போகிறது. எனவே மக்களின் நல் வாழ்வுதான் அவரது பொழுதுபோக்கு'' என்றேன். ரஷ்யப் பிரதிநிதி என் பதிலைக் கேட்டு வியப்படைந்தார்.



துஷான்பேயில் உள்ள ஒரு கூட்டுப் பண்ணைக்கு விஜயம் செய்தார் காமராஜ்.

பண்ணையைப் பார்வையிட்ட பிறகு விவசாயிகள் குடியிருப்புக்குச் சென்றார். விவசாயிகளைக் கண்டவுடன் காமராஜ் அவர்களுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. அவர்களுக்கும் இவரைக் கண்டதில் பெருமகிழ்ச்சி. அந்த மக்களுடன் அமர்ந்து வெகு நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார் காமராஜ். அவர்களுடைய க்ஷேம லாபங்களைப்பற்றியெல்லாம் விசாரித்தார்.

விவசாயிகளின் குழந்தைகள் காமராஜைச் சுற்றி நின்றனர். தங்கள் வீட்டில் தயார் செய்திருந்த உணவுப் பண்டங்களை அவருக்குக் கொடுத்துச் சாப்பிடும்படி உபசரித்தனர். காமராஜ் மகிழ்ச்சியுடன் அந்தச் சிற்றுண்டியைச் சாப்பிட்டார். அவர்களுடன் அமர்ந்து கொண்டு ஏதோ அந்தக் குடும்பத்தையே சேர்ந்தவர் போல் உரையாடினார். அவர்கள் வாழ்க்கை நிலை, சம்பளம், வயோதிகப் பென்ஷன் முதலியவை பற்றிக் கேள்விமேல் கேள்வி போட்டுக்கொண்டிருந்தார்.

**'சோஷலிச நாடுகளில் மக்கள் தலைவர்' என்னும் நூலிலிருந்து.**

அங்கிருந்த சில தாய்மார்களைப் பார்த்து, நம் ஊர்ப் பெண்மணிகளை விசாரிப்பது போல் ''என்னம்மா சௌக்கியமா?'' என்று வினவினார் காமராஜ். குழந்தைகளையெல்லாம் கன்னத்தில் தட்டி, ''வா, வா'' என்று அழைத்துத் தன்னுடன் அணைத்துக்கொண்டார்.

அந்தப் பண்ணைவாசிகளுக்கு, இந்திய நாட்டிலிருந்து வந்திருக்கும் பெரும் தலைவர் என்ற எண்ணம் மறந்து, நம் பண்ணையைச் சேர்ந்த ஒரு பெரியவரிடம் தான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டார் காமராஜ்.

**மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், அருள்மிகு பட்டுக்கோட்டை நாடியம்மன் ஆலயத் திருப்பணியைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார் (20.7.85).**



# பெருகிவரும் பால் வளம்

**பா**ல் உற்பத்தி தமிழகத்திலுள்ள விவசாயப் பெரு மக்களுக்கு மரபு வழியாகவே ஒரு துணைமை வாழ்க்கைத் தொழிலாக இருந்து வந்துள்ளது.

பால்பண்ணை வளர்ச்சித் துறை இம்மாநிலத்தில் கிராம அளவிலும் மாவட்ட அளவிலும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து நிர்வகித்து வருவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது.

பால்பண்ணை வளர்ச்சித் துறை கூட்டுறவு சங்கங்களை அமைத்து, பதிவு செய்து, அவைகளை மேற்பார்வை செய்து வருகிறது. பால்பெருக்குத் திட்டத்தில் சேராத தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் இத்துறை செயல்பட்டு வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தில் சேர்ந்த செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் பால் விரிவாக்கப்பணிகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் கவனித்து வருகிறது.

தமிழ்நாட்டில் 5,356 ஆரம்பப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. இவற்றில் 1984-85ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட 584 சங்கங்களும் இதில் அடங்கும். 1985-86ம் ஆண்டில் புதிதாக 400 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பால்சேகரிப்புக் குழு:** பால் பெருக்குத்திட்டத்தில்'' சேராத தஞ்சை, திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பால் உற்பத்தியினைப் பெருக்குவதற்கு, 'பால்சேகரிப்புக் குழுக்கள்' அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள ஒன்பது மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் உள்ள நிதியினைப் பயன்படுத்தி, பால்பெருக்கு நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. பால்பெருக்குத் திட்டத்தில் சேராத ஆறு மாவட்டங்களில் திருச்சி, தஞ்சாவூர், மற்றும் புதுக்கோட்டை ஆகியவை 1-4-1985 முதல் பால்பெருக்குத் திட்டம் 2ன் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், பால் பெருக்குத் திட்ட மாவட்டங்களுக்கு 11 பால் சேகரிப்புக்குழுக்கள் அமைப்பதற்கு இசைவு அளிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் இதுவரை 656 பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களை 'ஆனந்த் முறையில்' அமைத்துள்ளனர். மேலும் 144 சங்கங்களை 1984-85 ஆண்டு இறுதிக்குள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.


**(அ) கூட்டுறவு சங்கங்களுக்கான பால் பரிசோதிக்கும் கருவிகள், இரசாயனப் பொருட்கள், பதிவேடுகள் முதலியவைகளை சங்கங்களுக்கு இலவசமாக வழங்க ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 1,500** மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.5.25 இலட்சம் 350 சங்கங்களுக்கு வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் இந்தப்பணியினை முன்னிட்டு 200 சங்கங்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

**1983-84 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள், பால் கருவிகள், குளிர்பதனங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் வாங்கவும், ஆய்வுக்கூடம் மற்றும் கிடங்குகள் கட்டவும் ரூ.4.80 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் இதே போன்று கடனுதவியளிக்க ரூ.5 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.**

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

மலைப்பகுதிகளில் பால் பண்ணை தொழில்வளம் பெருக அரசு கடன் உதவி மற்றும் பங்கு மூலதன உதவி முதலியன வழங்கிவருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கொள்ளவு கொண்ட ஒரு நவீன பாலாடைக்கட்டி தொழிற்சாலை (Cheese cum Diary Complex) உதகமண்டலத்தில் ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமானப்பணிகளில் 80 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. இயந்திரத்தளவாடங்கள் நிறுவுவதற்கான பணிகள் முன்னேறி வருகின்றன.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில்



ரூ.150இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால்பண்ணை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. கட்டடம் கட்டும் பணி, இயந்திரங்களை நிறுவும் பணி அனைத்தும் தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**: தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடு துறையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தினரால் நிறுவுவதற்கு அரசு இசைவளித்துள்ளது. மேலும் இப்பணியின் பொருட்டு 50 சதவிகித மானியமாக ரூ. 9.5 இலட்சம் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை போன்ற மூன்று மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் விரிவுபடுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய பால்பெருக்கு வாரியம், பால் பெருக்குத் திட்டம்- சென்னை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முறையே ரூ.620 இலட்சம், ரூ. 684 இலட்சம், ரூ. 105 இலட்சம் செலவில் விரிவு படுத்த இசைவளித்துள்ளனர். இத்திட்டம் 1-4-1985 முதல் செயல்படுத்தப்படுகிறது.

கேற்ப ஒரு புதிய கால்நடை தீவன ஆலை ஒரு நாளைக்கு 100 டன் தீவன உற்பத்தி செய்கின்ற வகையில் மதுரையில் துவங்கப்படும்.

**பால் பெருக்குத் திட்டம்**:

1981ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதியோடு முடிவு பெற்றது. இத்திட்டம் சுமார் ரூ. 15.48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 1972ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பித்த பால் பெருக்குத் திட்டம்-1-ன் கீழ், அம்பத்தூரில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு பால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. ஈரோட்டில் உற்பத்தியை சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder balancing diary) ஒன்றும், சங்கராண்டன் பாளையத்திலும் மற்றும் சத்தியமங்கலத்திலும் 2 குளிர்பதன நிலையங்களும் ,1 கால்நடை தீவன நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆம்பூரிலும்,தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் மற்றும் சின்ன சேலத்திலும் குளிர்பதன நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மதுரை பால் பண்ணையில் நாளொன்றுக்கு 10 டன் உற்பத்தித் திறனுள்ள பால் பொடி உற்பத்தி செய்யும் ஆலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளைக் கொண்டு தரமான விந்துகளை வழங்க ஒரு நியுக்ளியஸ் ஜெர்ஸி பண்ணை நிறுவப்பட்டுள்ளது.




1983-84ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு மானியமாக வழங்க ஆதி திராவிடர் நல வரவு-செலவு திட்டத்தின் கீழ் ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 1984-85ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 3600 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு, கறவை மாடுகளின் விலையில் 33 சதவிகிதம் மானியமாக வழங்க ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 16 சதவிகிதத் தொகையான ரூ. 15 இலட்சம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழக நிதியிலிருந்து அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பதினைந்து மாவட்டங்களில் ஒன்பது

மாதவரம் பால் பண்ணை மற்றும் ஆம்பூரிலுள்ள கால்நடை தீவன ஆலைகள் ஒவ்வொன்றும் தற்போது மாதமொன்றுக்கு சராசரி 1,490 டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கின்றன.

ஈரோட்டில் ஒரு கால்நடைத் தீவன ஆலை,பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் கீழ் இயங்கி வருகிறது. இந்த ஆலையில் தயாராகும் தீவனம் சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. இதைத்தவிர தென் மாவட்டங்களின் தேவைக்

சென்னை நகரில் 1984-ல் வாடிக்கையாளர்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 4.25 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்பட்டது. இதனை 1985-ல் நாளொன்றுக்கு 4.75 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 491 பால் சாவடிகள், 27 தானியங்கி விற்பனை இயந்திரங்கள் மற்றும் 15 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் மூலமாக சென்னை மாநகரில் நுகர்வோர்கள் பால் பெறுகின்றனர். தானியங்கி விற்பனை இயந்திரங்களின் எண்ணிக்கை 3 ஆண்டுகளில் 100 ஆக அதிகரிக்கப்படும். இதில் 23 விரைவில் நிறுவப்படும். நுகர்வோரினை, பால் விற்பனையில் ஈடுபடுத்தும் பொருட்டும், பால் விநியோகிக்கும் முறையினைச் செயல்படுத்தும் பொருட்டும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



# பிற உயிர் காத்த பெருந்தலைவர்

**மு. நமசிவாயம்**

**கா**மராஜ்! நினைத்தாலே நெஞ்சமெல்லாம் சிலிர்க்கிறது. இதயம் நிறைகிறது.

அதிகம் படிக்காத காமராஜ், அனைவரையும் படிக்கச் செய்தார். அனுபவ அறிவும் சமய சஞ்சீவியாகச்செயல்படும்பண்பும் பாங்கும் நிரம்பப் பெற்றவர் அவர்.

தருணத்திற்கு ஏற்ற தலைமைப் பண்பு அவரிடம் இயல்பாகவே குடிகொண்டு இருந்தது.

இதோ ஒரு காட்சி! அவரது வாழ்க்கையில் ஓர் நிகழ்ச்சி!

**என்ன பயங்கரம்?**

ஆண்டு 1936, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளிக்குடி! காங்கிரஸ் அரசியல் மாநாடு நடக்கிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் (1936) எஸ். சத்தியமூர்த்தி,செயலாளர் கே.காமராஜ் மற்றும் தலைவர்கள் பலரும் அரசியல் மாநாட்டில் கலந்து கொள்ள கள்ளிக்குடிக்குப் பிற்பகலிலேயே வந்து விட்டனர்.

இரவு ஏழு மணிக்குத்தான் மாநாடு ஆரம்பம். மாலையில் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஊர்ப்புறத்தே, வயல்வெளிப் பக்கம் உலவி வருகின்றனர், தலைவர்கள்!

வயல் வெளிகளில், பெண்கள் களை பறித்துக் கொண்டே, பாடிய தெம்மாங்குப் பாட்டின் இன்பநாதம், காற்றில் மிதக்கிறது. காதுகளில் வந்து மோதிக் களிப்பூட்டுகின்றது.

ஒற்றையடிப்பாதை வழியே, சத்தியமூர்த்தி முன் செல்ல, மற்றவர்கள் பின் தொடருகின்றனர்.

பாதையோரத்தில், மரக்கிளையொன்றில் தொங்கும் தூளியை (தொட்டில்) காற்று மெல்ல அசைத்துத் தாலாட்டுகிறது. அதனுள் படுத்திருக்கும், சின்னப் பாப்பாவுக்கு நிம்மதியான தூக்கம்.

முன்னே சென்ற தலைவர் சத்தியமூர்த்தியின் நடை தடைப் படுகிறதே? கைத்தடியை உயர்த்தி ஓங்குகிறாரே?

ஏன், எதற்காக?

என்ன பயங்கரம்!

தூளிக்கயிற்றில், பாம்பு ஒன்று கீழே இறங்கி வருகிறதே! ஐயோ! குழந்தையின் கதி?

பாம்பை அடிக்க ஓங்கிய கைத்தடியை வீசாமல், தலைவர் சத்தியமூர்த்தி தயங்குவது ஏன்?

பாம்பை அடித்தால்...! தூளிக்குள்ளேயே, அது தவறி விழுந்து விட்டால்.....?

விநாடிகள் பறந்தோடுகின்றன. பாம்பு, கீழே இறங்கும் வேகம்..! படு பயங்கரச் சூழ்நிலை, சித்தம் குழம்புகிறது. சிலையென வாயடைத்துச் செயலிழந்து நிற்கின்றனர் எல்லோரும்!

தலைவருக்குப் பின்னால் வந்து கொண்டு இருக்கும் செயலாளர் காமராஜ், முன்னால் வருகிறார். கைத்தடியைக் கைப்பற்றுகிறார்.

தூளியைக் கட்டியிருக்கும் கயிற்றுக்கும், கயிற்றின் வழியே கீழே இறங்கி ஓடிவரும் பாம்புக்கும் இடையில், கயிற்றின் மீது, மெல்லப் பொருத்துகிறார், கைத்தடியை!

பாதை மாறுகிறது. பாம்பு, கைத்தடியில் ஊர்ந்து ஏறிச் சுருட்டிக் கொள்கிறது! அடுத்த கணம்! கைத்தடி எங்கோ போய்க் கீழே விழுகிறது! தூக்கி எறிகிறார் காமராஜ்.

பாம்பு விடுபட்டு ஓட்டம் எடுத்து, ஓடிப்பதுங்கி விடுகின்றது!

''அபாரம்! அபாரம்! அபாரம் காமராஜ்! அபாரம்!''

கட்டித் தழுவுகிறார். காமராஜின் செயல் திறனை மெச்சுகிறார். மகிழ்ச்சிக் குரல் எழுப்பிப் பாராட்டுகிறார், தலைவர் சத்தியமூர்த்தி!

இந்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் குழந்தையின் நிம்மதி குலைகிறது. தூக்கம் கலைகிறது. அழுகைக்குரல் ஓங்குகிறது.

கொல்லையில் களையெடுத்துக் கொண்டு இருப்பவர்கள் ஓடோடி வருகின்றனர்.

அழுகின்ற குழந்தையினை அள்ளியெடுத்து, அணைத்து, உச்சி மோந்து முத்தமிடும் தாயின் அதிர்ச்சி பெரியதா? மகிழ்ச்சி பெரியதா? மழலைக் குழந்தையின் பொக்கை வாய்ச் சிரிப்பு மகத்தானதா?

''ஐயா! நீங்க நல்ல இருக்கணும்'' என்று அகம் நிறைந்து முகம் மலர்ந்து வாழ்த்துகிறார் அந்த அன்னை!

பாம்பென்றால் படையும் நடுங்கும்; இது பழமொழி! ஆனால் பாம்பையும், தனது சமயோசித புத்தியால் ஆட்டிப் படைத்திடும் வல்லமை, காமராஜிடம் இயல்பாகவே அமைந்து விட்டது!

பாரவண்டி சாய்கிறது!

இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டைப் பகுதியில் முதலமைச்சர் காமராஜ் சுற்றுப் பயணம் செய்கிறார்.

ஒருநாள் ஒரு நிகழ்ச்சி முடிகிறது. அடுத்த நிகழ்ச்சிக்குக் காரில் சென்று கொண்டிருக்கிறார். ரயில்வே லெவல் கிராசிங் கேட் மூடப்பட்டு இருப்பதால், இடையில் சிறிது தாமதிக்க நேரிடுகிறது.

செங்குத்தான இடத்தில், லெவல்கிராசிங் அமைந்திருக்கிறது. கேட்டின் அருகில் சில கார்கள், அவற்றின் பின் இரட்டை மாட்டுப் பார வண்டி, அதற்குச் சற்று தூரத்தில், பின்னால் முதலமைச்சர் காமராஜ் பயணம் செய்த கார் நின்றுகொண்டு இருக்கின்றன.

ரயில் ஓடிவிட்டது. 'கேட்' கதவுகள் திறக்கப்படுகின்றன. தாமதித்த வாகனங்கள் முன்னால் நகருகின்றன.

'பாரவண்டி கொஞ்சம் போகட்டும்'' — முன்னால் மெல்ல நகரத் தொடங்கிய இரட்டை மாட்டு வண்டியைச் சுட்டிக் காட்டிக் கூறுகிறார், காமராஜ். முதல்வரது குறிப்பை உணர்ந்த காரோட்டி, சிறிது நேரம் பொறுத்தே, காரை ஓட்டத் தொடங்குகிறார்.

''லெவல்கிராசிங்'கை மாட்டு வண்டி எட்டித் தொடுகின்றது. காமராஜ் பயணம் செய்த காரும் அதனை நெருங்குகின்றது. மெல்ல ஊர்ந்து செல்கின்றது.

''தட! தட! ஓசை! வண்டி சாய்கிறதே!

சக்கரங்கள் பின்னால் உருளுகின்றனவே! பாரவண்டி சாய்கிறதே!

கண்ணிமைக்கும் நேரந்தான், சட்டென்று, காரைத் திறந்து, விரைந்தோடுகிறார் முதலமைச்சர் காமராஜ்!

சாயும் மாட்டு வண்டியைத் தோள் கொடுத்துத் தூக்கி நிமிர்த்துகிறார், முன்னால் உந்தித்தள்ளுகிறார். காரை நிறுத்தும்படி சைகை காட்டுகிறது ஒரு கை! விபத்து விலகுகிறது.

''வாங்கப்பா, ஓடி வாங்க! வண்டியை முன்னே தள்ளுங்க'' கூறுகிறார் காமராஜ்.

காரோட்டி, உடன் வந்திருக்கும் மெய்க்காப்பாளர், பின் தொடரும் பாதுகாப்புப் போலிசார் முதலிய பலரும் கை கொடுக்கின்றனர்.

பின்னால், சரிந்த வண்டி முன் னோக்கிப் பறக்கிறது.

''உம்...! செங்குத்தான பாதை! முன்பாரம், பின்பாரம் பார்த்து, வண்டியை ஓட்டக் கூடாதா? என்ன ஆகியிருக்கும்? ஆளுங்க குதிச்சித் தப்பிச்சுக்கிடலாம். சரிவிலே வண்டி வேகமா உருண்டிருந்தா...? காளைங்களோட கதி என்னா ஆகியிருக்கும்! நல்லவேளை தப்பிச்சுதுங்க! சமயத்திலே கவனிச்சுட்டேன்! பார்த்து ஓட்டப்பா, வண்டியை!'' — முதல்வர் காமராஜின் அன்புக் கண்டிப்பு.

மாட்டுவண்டிக்கு நேரிட இருந்த விபத்து குறித்து திகைப்பு, இமைப்பொழுதில் அதனைத் தவிர்த்த முதலமைச்சரின் துடிப்பு-திரம்-செயல்திறன் சுற்றிச் சூழ்ந்திருந்த எங்களிடம் ஒரே பிரமிப்பு!

இது மட்டுமா?

அகில இந்தியப்பெருந்தலைவராக விளங்கிய நேரம்!

அன்று, 7-7-1965. சென்னையில் இருந்து டெல்லிக்குப் புறப்படுகிறார் பெருந்தலைவர், காமராஜ்.

அன்று இரவு 7.30 மணி விமானத்தில் ஏறி, முன்சீட்டில் அமருகிறார்.

பாண்டிச்சேரி கவர்னர் சீலம், பாண்டி முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் உள்பட மொத்தம் 69 பயணிகள். விமானம் புறப்படத் தயாராகிறது.

அப்போது.....

விமான என்ஜினில் தீப்பொறி மின்னிச் சிதறிப் பறக்கின்றது.

தக்க சமயத்தில் தீப்பொறியைக் கவனிக்கிறார்; விமான ஓட்டியை எச்சரிக்கிறார்.

இதற்குள் விமானத்தின் முன் பகுதியில் பெரும்புகை கிளம்புகின்றது. பயணிகள் பதட்டமடைகின்றனர். பதைபதைக்கின்றனர். ஆனால், காமராஜ்,



பதறவில்லை. எல்லோரையும் விமானத்தின் பின்பக்க வாசல் வழியாகக் கீழே இறங்கும்படிச் செய்கிறார். அவர் மட்டும் தீப் பற்றிய இடத்திற்கு வெகு அருகிலேயே நின்று கொண்டு இருக்கிறார்.

பயணிகள் மற்றும் விமானப் பணிப் பெண்கள் உள்பட அனைவரும் பத்திரமாக இறங்கிவிட்டனர். ஆனால் காமராஜ் எங்கே? வெளியில் இருப்பவர்கள் துடித்துத் தவிக்கின்றனர்.

அதோ, காமராஜ், எல்லோரும் இறங்கிய பிறகு கடைசியாக இறங்கி வருகிறாரே,

''தீப்பிடிச்சதும் உடனே, நீங்கள் விமானத்தின் முன் வாசல் வழியாக, முன்னதாகவே வெளியே குதித்து இருக்கலாமே?''



பதட்டத்தோடு, கேட்கிறார் ஒருவர்.


''குதிச்சிருக்கலாம். ஆனால் நான் மட்டும்தானா விமானத்தில் இருந்தேன்! குழந்தையும் குட்டியும் வைச்சிகிட்டு அத்தனைப் பேர் இருந்தாங்களே அவங்க எல்லாரும் பத்திரமா, இறங்க வேண்டாமா என்ன?'' அமைதியாகத் திருப்பிக் கேட்கிறார், பெருந்தலைவர் காமராஜ்!

''நல்லகாலம்! எங்களையெல்லாம் தெய்வமாகக் காப்பாத்திட்டிங்க!'' காமராஜ் கைகளைப் பிடித்தபடி நெஞ்சம் நெகிழ நன்றி கூறுகின்றனர், பலரும்.

மற்றவங்களைக் காப்பாற்றுவதற்காகக் கடைசிவரை, அபாயத்தின் விளிம்பிலேயே நின்று கொண்டிருந்த அவரது அஞ்சாத நெஞ்சமும், பேராண்மைப் பண்பும் நமக்கெல்லாம் நல்ல வழிகாட்டி!

நமது முதல்வர் புரட்சித் தலைவரது ஆட்சியில், பெருந் தலைவரது பெயரும் புகழும் மணக்கிறது! அதோடு அவரது எண்ணங்களும் செயல் வடிவம் பெறுகின்றன.

---



# கப்பலைத் தூக்கும் விமானம்!

விமானந்தாங்கிக் கப்பலைப் பார்த்திருக்கிறோம். ஆனால் கப்பலையே தூக்கும் விமானத்தைப் பார்த்திருக்கிறோமா?

அண்மையில் பாரிஸ் அருகே நடைபெற்ற விமானக் கண்காட்சியில் பங்கு கொண்ட சோவியத் சரக்கு விமானம் எண்.124 பெரும் பரபரப்பை எற்படுத்தியது. ரஷ்ய இதிகாச வீரனின் பெயரான 'ருஸ்லான்' என்றழைக்கப்படும் இவ்விமானம் 150 டன் எடையுள்ள பொருள்களைக் கொண்டு செல்ல முடியும். அறுபது கார்களை அதன் பயணிகளுடனும் லக்கேஜுடனும் ஏற்றிச் செல்லும் திறன் படைத்தது இவ்விமானம். பெரிய கட்டடச் சாமான்களை மட்டும் அல்ல. நதிகளில் செல்லும் கப்பலைக்கூட இதில் ஏற்றிஅனுப்பலாம். மிகவும் அளவில் பெரிய பொருள்களை ஏற்றுவதற்கு வசதியாக விமானம் தன் வயிற்றுப் பகுதியைக் கொண்டுள்ளது. சரக்குகள் வைக்கும் பகுதியின் நீளம் 30 மீட்டர். அகலம் 6.5 மீட்டர். உயரம் 4.5 மீட்டர்.

மணிக்கு 850 கிலோ மீட்டர் வேகத்துடன் பறந்து செல்லும் இவ்விமானம் 16,500 கிலோ மீட்டர் இறங்காமல் பறக்க முடியும். சாதாரண விமானங்களைப் போலல்லாமல் புல் தரையில் இறங்கவும், அதிலிருந்து புறப்படவும் இதனால் முடியும். பெரிய மாடி வீடு போல காட்சி அளிக்கும் இவ்விமானத்தில் நான்கு அறைகள் கொண்ட விமானிகள் தங்க இடம் உள்ளது. ஒரு சமையலறை, குளியலறை, கழிவறை, மூன்று பேர்கள் படுக்கும் வசதி கொண்ட இரண்டு படுக்கை அறைகள் உள்ளன. ஆறு பேர்கள் கொண்ட விமானிகள் குழு விமானத்தை ஓட்டிச் செல்லும்போது மற்றொரு விமானிகள் குழு ஓய்வெடுக்கிறது. பெரும்பாலும் இயக்கத்தைக் கம்ப்யூட்டரே நடத்துகிறது.




# வாய் நலம் பேணுவோம்!

பல் மருத்துவத் துறை தமிழ் நாட்டில் பெருமையுறத்தக்க விதத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதற்கு எடுத்துக் காட்டாகக் கருத்தரங்கு ஒன்று ஜூலை 8,9தேதிகளில் சென்னையில் நடைபெற்றது.


தமிழ்நாடு அரசு பல் மருத்துவமனை - மருத்துவக் கல்லூரி சார்பில் நடத்தப் பெற்ற இந்தக் கருத்தரங்கை - அரசு தலைமைச் செயலாளர் திரு டி. வி. அந்தோணி இ. ஆ. ப. அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் துவக்கி வைத்தார்.

பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன் வரவேற்புரையோடு தொடங்கிய முதல்நாள் கருத்தரங்கில் - மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர். சண்முகம் இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், ''மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களையெல்லாம் கடைப்பிடித்து வருவதால் வாய்ச் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது என்றும், நட்சத்திர ஓட்டல்களில், சாப்பிட்ட பின் வாய் கொப்பளிக்கச் சரியான இடம் இல்லாததால் வாயில் உணவுப் பொருட்கள் தங்கி, பற்களைச் சேதப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்றும் நமது தமிழ்நாட்டுப் பழக்கத்தின் படி ஆகார வகைகளில் உள்ள காய்கறிகளையும் அவைகளை உண்ணும் முறைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும், உணவுக்குப் பின் வெற்றிலை போடும் பழக்கம் பல் சுகாதாரத்திற்கு மிகவும் உதவி வந்தது என்றும் த்ற்போது நமது ஆகாரப் பழக்கங்களை மாற்றிக் கொள்ளும்போது பல் சிதைவு அதிகம் ஆகிறது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அவர் பேசுகையில் தமிழ்நாட்டில் 30.4 சதவீத மக்கள் மட்டுமே பற்பசை, பல் பொடி உபயோகிக்கிறார்கள். மற்ற சதவீத மக்கள் மணல், களிமண், செங்கல் பொடி, கரித்தூள், எரித்த உமி போன்றவைகளை உபயோகிக்கிறார்கள், ஒரு பல் மருத்துவரை உருவாக்க அரசாங்கம் ரூபாய் 1,50,000 செலவழிப்பது இப்படிப்பட்ட நிலையை மாற்றத்தான்'' என்றும் குறிப்பிட்டார்.

கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இந்தக் கருத்தரங்கில், கலந்து கொள்ளும் பல் மருத்துவர்கள் வாய்ச் சுகாதாரம் பேணு





வதில் முக்கியப் பங்கு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பற்களில் ஏற்படும் நோய்களின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து அதற்கேற்ப மக்களுக்குத் தடுப்பு முறைகளை எடுத்துரைக்கும்படியும் அறிவுறுத்தினார். தொழிலாளர்களின் பல் நலனையும் குறிப்பாகக் கவனிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். சமுதாயப் பல் பாதுகாப்புத் திட்டத்தைப் பிற அமைப்புகளின் உதவியைக் கொண்டு தீவிரமாகச் செயல்படுத்தும்படி கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் குறிப்பாக ஏழை மக்களுக்கும் பல் சுகாதாரம் பற்றி விரிவாக எடுத்துரைக்க வேண்டுமென்று பல்



மருத்துவர்களைக் கேட்டுக் கொண்டார்.

திரு ஆர். சண்முகம் இ.ஆ.ப., (ஆணையர் மற்றும் செயலர், மக்கள் நல்வாழ்வுத் துறை) அவர்கள் பேசுகையில், கிராம மக்களுக்கு வாய்ச் சுகாதார விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்குச் சுகாதார அமைப்பாளர்களுக்கு நாம் முதலில் தகுந்த பயிற்சி அளித்து அதை அவர்கள் கிராம மக்களுக்கு ஏற்ற எளிய செயல் முறையில் கடைப்பிடிக்க எடுத்துச் சொல்லும்படி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கருத்தரங்கின் அமைப்பாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன் அவர்கள் பேசுகையில் - 'பல் சுகாதாரத்திற்கு ஆகார வகைகளில் மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

இரண்டாம் நாள் (9-7-85) நடைபெற்ற கருத்தரங்கில் - இலக்கியச் செல்வர் திரு குமரி அனந்தன் எம்.எல்.ஏ., தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், பாலமந்திர் பள்ளித் தலைமையாசிரியை திருமதி என். வசந்தா, அரண்வாயில் மேநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. எம். பாலகிருஷ்ணன், மாநகராட்சி கூடுதல் சுகாதார அலுவலர் டாக்டர் ராஜ்மோகன், சமூக நலத்துறை உடல் ஊனமுற்றோர் பிரிவு அலுவலர் திரு. பிச்சைமௌலி விளம்பரத்துறை இயக்குநர் திரு ஆர். சந்திரமவுலி, 'தமிழரசு' இல. இராசேந்திரன் போன்றாரும் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

இரண்டு நாள் கருத்தரங்கிலும் பல்வேறு மருத்துவத்துறை வல்லுநர்களும், வெவ்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோரும், பல் மருத்துவக்கல்லூரிப் பேராசிரியர்களும் - மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



இரண்டு நாள் கருத்தரங்கிற்கும் மிகச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார் பேராசிரியர் டாக்டர் என். ஞானசுந்தரம்.

கருத்தரங்கின் முடிவில் நன்றியுரையாற்றினார் பேராசிரியர் டாக்டர் சி. எஸ். பிரசாத்.

—ராஜா



# முன்னாள் படைவீரர் நலம் காப்போம்

முன்னாள் இராணுவத்தார் நல இயக்ககத்திற்கென்று சென்னை சைடன்ஹாம்ஸ் சாலையில் ரூ. 45 இலட்சம் செலவில் புதிய கட்டட வளாகம் உருவாக்கப் பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவில் *(10-7-85)* மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் இக்கட்டடத்தை மேதகு ஆளுநர் அவர்கள் திறந்து வைத்தார்.

"முன்னாள் இராணுவத்தினர் பொருளாதார மேம்பாடு அடையத் தொழில் நடத்துவதற்கெனத் தனி கார்பொரேஷன் அமைப்பது பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. இராணுவத் தளவாடங்கள், உதிரி பாகங்களெல்லாம் இப்போது தனியார் நிறுவனங்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. அவற்றை முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டே தயாரிக்க அரசு எண்ணியுள்ளது. மத்திய அரசு போதுமான நிதியுதவி அளிக்குமெனில், மாநில அரசு இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றும்'' என்று தனது தலைமையுரையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.


"முன்னாள் இராணுவத்தினர் தொழில்துறையிலே ஈடுபட்டால் மிகச் சிறந்த கட்டுப்பாடு இருக்கும். ஆகவே, இன்றுள்ள தொழிலதிபர்கள், முன்னாள் இராணுவத்தினருக்கு வேலைவாய்ப்பு தந்து, அவர்களுடைய உழைப்பை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா, அவர்கள் தமது உரையிடையே கேட்டுக் கொண்டார்.

முன்னாள் இராணுவத்தார் நல இயக்கக இயக்குநர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் தனது வரவேற்புரையின்போது, முன்னாள் இராணுவத்தினருக்கான நிதி வசூலில் தமிழ்நாடு முதலாவதாக இருப்பதைப் பெருமையோடு குறிப்பிட்டார்.

இந்த விழாவில் முன்னாள் இராணுவத்தாரின் குடும்பங்களுக்குக் கருவிகள், நிதி ஆகியவை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

முன்னாள்படைவீரர் சின்னப்பன் என்பாருக்கு இந்த வளாகத்திலேயே வைக்க ஒரு பெட்டிக்கடை அளிக்கப்பட்டது. முன்னாள் இராணுவ அதிகாரிகள் திரு. எஸ். பி. மகாதேவன், திரு. கே. எஸ். ராஜா ஆகியோருக்கும் வட்டார இராணுவத் தலைமை அதிகாரிகளுக்கும் மேதகு ஆளுநர் அவர்களால் நினைவுப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., இராணுவ அதிகாரி பிரிகேடியர் வீரேந்தர் சிங். பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் திரு என். பாலசுப்பிரமணியன் ஆகியோரும் உரையாற்றிய இந்த விழாவில் முடிவில்-இவ்வியக்ககத்தின் துணை இயக்குநர் திரு. காந்திமோகன் பாரதி நன்றி கூறினார்.





# தம்பியா ? தோசையா ?

"நான் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தேன். இளம் வயதினரான என் இரண்டு மகன்களும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்ளுவார்கள்; பெரியவன், சின்னவனை அடித்துவிடுவான்.

"நமக்கு ஒரு தம்பி இருந்தால் நாமும் அடிக்கலாமே என்ற நினைப்பு சின்னவனுக்கு. என்னிடம் அவன் ஒருநாள், "அப்பா, எனக்கு ஒரு தம்பி வேண்டும்" என்று கேட்டான்.

"அவன் எதற்காகக் கேட்கிறான் என்பதை நான் புரிந்துகொண்டேன். அப்போதெல்லாம் குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரம் அவ்வளவு தீவிரமாக இல்லையாதலால், அதுபற்றியெல்லாம் குழந்தைகளிடம் பேச இயலாது.

"சிறிது யோசித்துவிட்டு நான் என் சின்ன மகனோடு பேசலானேன்: "தினமும் அம்மா உனக்கு எத்தனை தோசை கொடுக்கிறார்?"

"மூன்று தோசை அப்பா" என்றான் அவன்.

"உன் அண்ணனுக்கு?"

"அவனுக்கும் மூன்றுதான்!"

"ஆக, இப்போது உனக்கும் உன் அண்ணனுக்கும் மொத்தத்தில் ஆறு தோசை கிடைக்கிறதல்லவா? உனக்கு ஒரு தம்பி வந்தால் இந்த ஆறு தோசையைப் பங்கிட வேண்டும். அப்படிச் செய்தால் ஆளுக்கு இரண்டு தோசைதான் வரும். இப்போது சொல்: உனக்குத் தம்பி வேண்டுமா? அல்லது தோசை வேண்டுமா?"


"நான் இப்படிக் கேட்டதும் அவன் சிறிதும் தாமதிக்காமல — "எனக்குத் தோசையே போதும் அப்பா" என்றானே பார்க்கலாம்!



சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு விருந்தளிக்கப்பட்ட நிகழ்ச்சியில் மாண்டலின் இசை வழங்கிய மாஸ்டர் யு. சீனிவாசுக்கு, நடராஜர் சிலையைப் பரிசளித்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

"இப்படி நாம் அவரவருக்குப் புரியும்படி குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரத்தைச் செய்தாக வேண்டும், அதிலும் குறிப்பாகச் சட்டப்பேரவை-மேலவை உறுப்பினர்கள் குடும்பநலத் திட்டப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்!"

[மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சட்டமன்ற வரவு செலவு திட்டக் கூட்டத்தொடர் முடிந்ததையொட்டி, சட்டப் பேரவை-மேலவை உறுப்பினர்களுக்கு (19. 7.85) அளித்த விருந்தில் அரசு தலைமைச் செயலாளர் திரு டி வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் ஆற்றிய வரவேற்புரையில் குறிப்பிட்டது.]



# குடி குடியைக் கெடுக்கும்

குடியினால் வரும் தீமைகள், அதனால் சமுதாயத்துக்கு உண்டாகும் கேடுகள் முதலானவை குறித்து ஒரு பட்டறை நடந்தது. இதை நடத்தியது தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனம்.

4.7.85, 5.7.85 ஆகிய இரண்டு நாட்கள் நடந்த இந்தப் பட்டறையில் ஏராளமான பெண் ஊக்குநர்கள் கலந்துகொண்டார்கள்.

'மதுவினால்-போதைப் பொருளினால் விளையும் தீமைகள்' என்பதே பட்டறையின் பொருள். இரண்டு நாட்களும் பல்துறை அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டார்கள்.

தேசிய வயதுவந்தோர் கல்வித் திட்டத் தலைவி திருமதி பத்மினி சிவசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மகளிர் தொண்டு நிறுவனத்தின் பல்வேறு அலுவல்களையும், வயதுவந்தோர் கல்வித்திட்டத்தின் வாயிலாகச் செயல்படுத்தக்கூடிய சாதனைகளையும். விளக்கினார்.

மகளிர் தொண்டு நிறுவனத்தின் உதவி இயக்குநர் திருமதி சரோஜினி வரதப்பன், பட்டறையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்னும், காந்தியடிகளின் கொள்கையை நினைவுகூர்ந்தார். குடிப் பழக்கம் குடி கெடுக்கும்; சமுதாய நற்பணிகளை வேருடன் அறுத்துவிடும்; மனித வர்க்க முன்னேற்றத்திற்கு அது முட்டுக் கட்டை, இதனால் குடும்பம் பாதிக்கப்படுகிறது என்றும் எடுத்துக் கூறினார்.

மனநல மருத்துவர் திரு ராமச்சந்திரன், பேசுகையில், 'மதுவினால் உடல் நலத்திற்கு எவ்வாறு கேடுகள் ஏற்படுகின்றன?' என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார். வாழ்க்கையின் அடித்தளத்தில் இருப்பவர்கள் எங்ஙனம் மதுவிற்கு அடிமையாகின்றனர் என்பதை ''மகிழ்ச்சி அடைந்த போதும் மது அருந்துகிறோம், துன்பத்திலும் மது அருந்துகிறோம். மகிழ்ச்சியின்முதல் எழுத்து 'ம', துன்பத்தின் முதல் எழுத்து 'து'. இதுவே ''மது'' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார். 'மது அருந்துவதனால் ஏற்படும் பாதிப்புகள் அதிகம், தொடர்ந்து குடிப்பதன் மூலம் ஒருவர் குடிக்கே அடிமையாகிறார். அவர்களை Bad Alcohoic sad Alcoholic and mad Alcoholic என்று பிரிக்கலாம். தமிழ்நாட்டு மக்கள் தொகையில் 2½ கோடி ஆண்மக்கள்-இதில் 25% விட்டுவிட்டோ அல்லது தொடர்ந்தோ மது அருந்துகிறார்கள். 50 ஆயிரம் ஆண்கள் மது அடிமைகளாக உள்ளனர். இவர்களைத் திருத்துவதற்கு மனநல மருத்துவம் அவசியம். தனிமனிதனின் உடல்நிலை. மனநிலை, சமூக நிலை ஆகியவற்றைப் பாதிக்கும் இம்மது தேவைதானா? இன்றைய மாணவ சமுதாயம் மதுவினாலும், போதைப் பழக்கத்தினாலும் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறினார்.




பேராசிரியை திருமதி ராஜலட்சுமி ''மாணவ சமுதாயத்தில் மது போதைப் பழக்கங்கள் ஏற்படுத்தும் தீமைகள்'' என்ற தலைப்பில், மாணவர்கள் மேலை நாட்டுப் பழக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாலும் கெட்ட சகவாசங்களினாலும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளினாலும், பெற்றோர்களின் பொறுப்பற்ற தன்மைகளினாலும் இக்கொடிய பழக்கங்களுக்கு ஆளாகி, அதனால் உடல்நலிவுற்று, மனநலம் பாதிக்கப்பட்டு, இவ்வுலகில் வாழ அருகதையற்றவர்களாகிறார்கள். பழக்கத்




திற்கு ஆளாகிப் பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர். இதைத் தவிர்க்க முடியுமா? சமூகசேவை செய்வதன் மூலம்-இக்கொடிய பழக்கத்தின் தீமைகளை மக்களிடையே பிரசாரம் செய்வதன் மூலம் இதைத் தவிர்க்கலாம்' என்று கூறினார்.

திருமதி பத்மினி சிவசுப்பிரமணியம், குடியின் கொடுமைகளால் பெண்கள் படும் அவலங்களை எடுத்துக் கூறினார்.

திருமதி வத்சலா நாராயணசாமி, மது பழக்கத்தினால் மனிதனின் வாழ்க்கைத்தரம், உடல் நலம், வேலைத்திறமை, மூளை வளர்ச்சி, குடும்ப ஒழுங்குக் கட்டுப்பாடு, சமுதாய ஒழுங்கு ஆகியன கெடுகின்றன. இதனால் குற்றத்தன்மை பெருகி வறுமையின் வளர்ச்சி அதிகமாகி, தேசிய செல்வம் வீணாகிறது என்று கூறினார்.

இரண்டாம் நாள் (5.7.85) அன்று நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட டாக்டர் பீட்டர் ஃபெர்னாண்டஸ், இக்கொடிய பழக்க வழக்கங்களினால் குடல், கல்லீரல், நரம்பு ஆகியனப் பயனற்றுப் போகின்றன என்றும், திறமை குறைதல், கண்பார்வை மங்குதல், உறக்கமின்மை, மூளை பாதிப்பு, தன்னம்பிக்கை இழத்தல், சந்தேகத்திற்காளாகுதல், ஞாபகமற்று விடுதல், மனச் சோர்வுக்கு ஆளாகுதல் போன்ற உடல், மனம், சமுதாயப் பொருளாதார விளைவுகளையெடுத்துக் கூறி, அவர்களுக்குச் சிகிச்சையளித்து மறுவாழ்வு பெறும்படிச் செய்தல் அவசியம் என்று வலியுறுத்தினார்.

டாக்டர் சாந்தா ரங்கநாதன், குடியே ஒரு நோயென்றும், குடியினால் ஏற்படும் பல விளைவுகளையும், குடிகாரர்களுக்கு ஏற்படும் மறதி நோய், அதனால் விளையும் குழப்பங்களையும், உடலுக்கும் மனத்திற்கும் ஏற்படும் அசௌகரியங்கள் பற்றியும் கட்டுப்பாட்டை இழக்கின்ற அளவுக்குக் குடிப்பவர்களின் பொறுப்புகளைக்குடும்பத்திலிருப்பவர்கள் ஏற்றுக் கொள்வதனால் மறைமுகமாக நாமே அவர்களுக்கு மேலும் குடிப்பதற்குத் தூண்டுகோலாய் இருக்கக்கூடாது

## 'தமிழரசு' சந்தா விவரம்

'தமிழரசு' (தமிழ்)

ஆண்டுச் சந்தா: ரூ 18

அரையாண்டுச் சந்தா: ரூ 9.

விவரங்கட்கு:

உதவி இயக்குநர்,
தமிழரசு அலுவலகம்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

பட்டறை நிறைவு விழாவிற்கு வருகை தந்த பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் திரு.வா. அ. சிவஞானம் பேசுகையில், ஊக்குநர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் இம்மாதிரியான மதுவின் தீமைகள் 'பற்றி புது விதத்தில் பயிற்சி அமைத்தது குறித்து பாராட்டிய தென் ஆர்க்காடு கிராமத்தில் ஆண்கள் முதியோர் கல்விமையத்தில்; எப்போதும் மது அருந்தும் பலரில் நான்கு பேர் அங்குள்ள ஊக்குநரின் அறிவுரையினால். மது அருந்தவில்லை என்பதை நேரில் கண்டு மகிழ்ந்தேன் என்றும் கூறினார்.

மகளிர் தொண்டு நிறுவனம், சென்னை மாநகரில் உள்ள குடிசைப்பகுதிக்ளில் பல மையங்களை ஏற்படுத்தி, பெண் மேலாளர்கள், ஊக்குநர்களை நியமித்து அந்தந்தப் பகுதி மக்களின் அறியாமையைப் போக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் சிறு சேமிப்பு, குடும்ப நலம், தீண்டாமை ஒழிப்பு, வரதட்சிணை போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

சமுதாயத்தின் கொடிய நோயாகக் கருதப்படும் குடிப் பழக்கத்தை ஒழிக்கும் பணியில் மகளிர் ஈடுபாடு கொண்டு ஒரு கருத்தரங்குக்கே ஏற்பாடு செய்ததை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

— பி.வி. கிரி



# சிவகங்கையில் "கிராபைட்"

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகில் உள்ள புதுப்பட்டி, குமாரபட்டி, சேந்திஉடையநாதபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் கிராபைட் கிடைக்கிறது. இந்த கிராபைட் கனிமம் உலகத்திலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படும் 'மடகாஸ்கர்' வகை கிராபைட்டுடன் ஒப்பிடத்தக்க தரத்தில் இருப்பதாகக் கருதப்படுகிறது. கிராபைட் கனிமம் மூசைகள் எனப்படும் வெப்பக் கலன்கள் செய்யவும், உராய்வுக் குறைப்புப் பொருள்கள், மின் முனைகள், சாயங்கள், சில ஆகாயவிமானத்தின் பாகங்கள் ஆகியவை செய்யவும் மூலப்பொருளாகப் பயன்படுகிறது.

அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற்கண்ட கிராபைட் கனிமத்தை வெட்டியெடுக்கத் திட்டமிட்டுஅத்திட்டத்தை (1) கனிமத்தை வெட்டியெடுத்தல் (2) சுத்திகரித்தல் (3) கிராபைட்டைப் பயன்படுத்தி பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைத்தல் ஆகிய மூன்று கட்டங்களாகச் செயலாக்கவிருக்கிறது. சுரங்கப் பணிகளைத் திட்டமிட நெய்வேலி லிக்னைட் நிறுவனமும் சுத்திகரிப்பாலை அமைக்க ''நேஷனல் மெட்டலர்ஜிகல் லேபரட்டரியும்'' தொழில் நுட்ப உதவி அளித்துள்ளன. இப்பணிகளுக்கு அரசு ஒப்புதலை அளித்துள்ளது.

கிராபைட் கனிமம் கிடைக்கும் நிலப் பரப்பில் சுமார் 477 ஏக்கர் தனியாருக்குச் சொந்தமானவையாகும். மீதி 563 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலமாகும். தனியாரின் நிலங்கள் நில எடுப்பு செய்து மேற்கொள்வதற்கான பணிகள் தீவிரமாக அரசு ஒப்புதல் பெற்று நடைபெற்று வருகின்றன. அரசுப் புறம்போக்கு நிலங்களைத் தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமாக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

சுரங்கப் பணிகளுக்கும் சுத்திகரிப்பாலை அமைப்பதற்கும் ரூ. 340 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அரசு ரூ. 55 இலட்சம் தொழிற்சாலை அமைப்போரின் மூலதனப் பங்காக அளிக்கிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது ஆதாயத்திலிருந்து ரூ. 30 இலட்சம் ஒதுக்கவிருக்கிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூ. 240 இலட்சம் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. மீதி ரூ. 15 இலட்சம் மத்திய அரசிடமிருந்து மான்யமாகப் பெறப்படும்.

சுத்திகரிப்பாலை 100 டன் கிராபைட் மூலக்கனிமத்திலிருந்து 14 டன் சுத்திகரிக்கப்பட்ட 85 விழுக்காடு கரிச்சத்துள்ள கிராபைட் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகஇருக்கும். தொழிற்சாலைக்கான கட்டடங்கள் கட்டும் பணிகளுக்காக டெண்டர்கள் கோரப்படுகின்றன. தொழிற்சாலையில் பொருத்தப்பட உள்ள இயந்திரங்களுக்கு இயந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் தொழிற்சாலைக் கட்டடங்கள் கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட உள்ளன.

தொழிற்சாலைக்கான மின்சாரம் பெறுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திடம்முறையாக மனு செய்து கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீருக்கு நிலத்தடி நீரையே பயன்படுத்தலாம் என ஆராய்ந்தறியப்பட்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூசைகள் எனப்படும் வெப்பக்கலன்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை உலகில் ஒரு சில நிறுவனங்களே அறிந்து வைத்துள்ளன. அந்த வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்பத்தைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக அந்நிறுவனங்கள் சிலவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும்மேலாண் இயக்குநர் அமெரிக்க நாட்டிற்குக் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் சென்று வந்துள்ளார். கிராபைட்டைப் பயன்படுத்தி ஆகாய விமானத்தின் பாகங்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை வெளிநாட்டு நிறுவனத்தின் தொழில் நுட்பக் கூட்டுறவுடன் அமைப்பது பற்றியும் சில நிறுவனங்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தி வந்துள்ளார். இது பற்றித் தகுந்த நடவடிக்கைகளைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற்கொண்டுள்ளது. மேலும் சிவகங்கை கிராபைட் இருப்பைப் பற்றி முழுமையாக ஆய்ந்தறியத் தொழில் நுட்பவல்லுநரின் உதவியை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பெறுவதற்கும் தமிழ்நாடு கனிம நிறுவனம் முயன்று வருகிறது.

தற்போது கனிமத்தை வெட்டியெடுக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. அதன் மூலம், சுத்திகரிப்பாலையும் இதர தொழிற்சாலைகளும்அமைக்கப்பட்டால் இம்மாவட்டத்தில் சுமார் 600 பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க இயலும்.

**வை. புண்ணியமூர்த்தி**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

# பார்த்தோம் படித்தோம்

ஐந்தாண்டுப் பணிகள் தொகுப்பு இதழ் டாக்டர் புரட்சித்தலைவர் அரசின் பொற்காலத்தை நன்கு விளக்கியது.

பி.ஆர்.நெல்லையப்பன்
நெல்லை.

மாணவர் பக்கத்தில் கேள்வி பதில் பகுதியை எதிர்பார்க்கிறோம்.

எஸ்.எஸ்.வாசன்,
தென்எலப்பாக்கம்.

தமிழக அரசு பரிசுச் சீட்டுமுடிவுகள் மற்றும் வாசகர்கள் கட்டுரைகளுக்கு 'தமிழரசு' வாய்ப்பளிக்குமா?

ஜி.டி.ராஜா,ஜி.டி.பிரபு,ஜி.டி.சத்யா, கீழ்ப்பழுவூர்.

'படமும்-செய்தியும்' பகுதி பார்ப்பதோடு மட்டுமல்லாமல், பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய குறிப்பாகவே அமைந்துள்ளது.

புதூர் குமரன்,
ஒரத்தநாடு.

தமிழரசில் வரும் அரிய கட்டுரைகள் மூலம் பற்பல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மாணவர் பக்கம், மாணவர்களின் அறிவாற்றலை வளர்ப்பதோடு அவர்களைப் பெருமையடையவும் செய்கிறது.

ஹேமதாசன்,
உடையார்கோவில்.

மூர் ஆங்காடி தீ விபத்து பற்றிய கட்டுரை படித்தேன். அதில் குறிப்பிட்டிருந்த அரிய புத்தகக் கருவூலங்களையெல்லாம் தீப் பிழம்பு விழுங்கிவிட்டது என்ற செய்தியை அறிந்து கலங்கிவிட்டேன்.

என்.ஜி.தஸ்தகீர் சாயுபு,
நாகூர்.

16.6.85ல் வெளியான 'சென்னையில் சேக்கிழார் விழா' செய்தித் தொகுப்பு மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது. தொகுப்பாசிரியர்கள் தமிழ்ப்பித்தன், சோழராசன் அவர்களுக்கு எங்கள் பாராட்டுகள்.

ரெ.சுப்பாராஜூ,
கன்னித்தேவன்பட்டியில்,

மூர் அங்காடியில் தீ விபத்து குறித்து முதல்வர் எடுத்த துரித நடவடிக்கையைப் படித்தேன். படமும்-செய்தியும் பகுதியில் முதல்வரின் முத்தான முகத்தை கண்டு மகிழ்ந்தேன்.

எஸ். சுந்தரராஜன்,
மன்னார்கோவில்.

தமிழ்நாடு அரசு பல்வேறு துறைகள் பற்றி வெளியிடுகின்ற வெளியீடுகளின் விவரங்களைத் தமிழரசில் வெளியிடலாமே!

சு. ஆறுமுகம்,
வேலூர்.

அறிவியல் சாளரம் பகுதியில் ''மனிதர்கள் படைத்த மனிதர்கள்'' பற்றிய செய்திகளைப் படித்தேன். இந்த ரோபடிக்ஸ் மிக நுணுக்கமான செயல்களைச் செய்யப் பயன்படுத்தப்படுகிறது என்றால் அது அறிவியல் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

எஸ்.பி.சந்தானராஜகோபால்,
களப்பாள்.

'மாணவர் பக்கம்' மிகுந்த பயனளிப்பதாய் இருக்கிறது. துணுக்குகளும், கவிதைகளும் மிகுந்த சிறப்புடனும், சிந்தனைக்கு உகந்ததாகவும் உள்ளன.

எஸ்.கே.விஜயகுமார்,
குழிவிளை.

தமிழ்நாட்டுக் கல்வி பற்றிய சிறப்புக் கட்டுரை படித்தேன். இன்றைய தமிழகத்தின் கல்வி வளர்ச்சியையும், சாதனைகளையும் புள்ளி விவரங்களுடன் வாசகர்களுக்குப் புரிய வைத்தமைக்கு நன்றி.

செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.



## உடலைக் கெடுக்கும் சிகரெட் புகை

''புகை பிடிப்பதைத் தடுப்பதற்கான நீண்ட கால இயக்கம் செயல்படுத்தப்படுமானால், நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் மக்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான சக்தி வாய்ந்த நடவடிக்கையாக அது அமையும்'' என்று, பிரபல சோவியத் புற்றுநோய் மருத்துவ நிபுணர் கருத்துத்தெரிவித்துள்ளார்.

''புகை பிடிப்பதால் தங்களுக்கு ஏற்படும் தீமையை மக்கள் உணர்வது இல்லை. புற்றுநோய், இரத்த மண்டல நோய்கள் முதலியவற்றினால் ஏற்படும் மரணத்திற்கும், உடல் கெடுவதற்கும் முக்கிய காரணம் புகை பிடிப்பதுதான், முதியோரிடையே இரத்த ஓட்டத் தடையினால் ஏற்படும் மரணங்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் காரணம் புகை குடிப்பதுதான்'' என்று அவர் மேலும் கூறினார்.

இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் புகை குடிப்பதால் நுரையீரலில் புற்றுநோய் ஏற்பட்டு இறப்போர் தொகை 10 இலட்சமாக உயரக்கூடும் என்று எதிர்பார்க்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். புகையிலையினால் ஏற்படும் மற்ற நோய்களால் இறப்போர் தொகையையும் இதோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.



# நெசவாளர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி!

மாவட்ட ஊரக வேலைவாய்ப்பு அமைப்பும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும், நெசவாளர் பொருளாதார சுதந்திரம் பெறும் வகையில் உதவி அளிப்பதால், மாஸ்டர் வீவர்கள் மறைந்து வருகிறார்கள்.

திருச்சி மாவட்டம் வத்தலைக் கிராமத்தைச் சேர்ந்த சரோஜா, ஜெகதாம்பாள், மகாலட்சுமி, மருதை ஆகியோர் பாய் நெய்யும் தொழிலாளர்கள். 2 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை கூலி பெற நாள் முழுவதும் வேர்வை சிந்த பாய் நெய்வார்கள்.

இங்கு நெய்யப்படும் பாய்களுக்கு நகரங்களில் நல்ல கிராக்கி உள்ளது. திருமணக் காலங்களில் கலைவேலைப்பாட்டுடன் கூடிய பாய்களை அவர்கள் நெய்வார்கள்.

அவர்கள் நிலையை அறிந்த மாவட்ட ஊரக வேலை வாய்ப்பு அமைப்பு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் தலா ரூபாய் 1000 கடனும் 250 ரூபாய் மானியமும் அளித்தது.

பாய் நெய்ய நாணல், வர்ணம் மற்றும் இரசாயனப் பொருள்களை அவர்கள் இந்தத் தொகை மூலம் வாங்கினார்கள். அவர்கள் நெய்யும் ஒவ்வொரு பாயிலும் 6 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை இலாபம் கிடைக்கிறது. திறமைமிக்க அந்தத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 3 பாய்கள் நெய்வார்கள்.

சரோஜாவும் அவருடைய பக்கத்து வீட்டினரும் வங்கி அளித்த உதவியால் வளமான வாழ்வைப் பெற்று இருக்கிறார்கள். அவர்கள் பெற்ற கடனைச் சுலபமாகத் தவணையில் கட்டலாம். 4 சதவீத வட்டிதான் அவர்களிடம் வசூலிக்கப்படுகிறது.



# வளமான வாழ்விற்கு படி அமைக்கும் செங்கல்

திருச்சியைச் சேர்ந்த கந்தசாமி அவருடைய சகோதரர் பொன்னுசாமி ஆகிய இருவரும் செங்கல் ஆலையை அமைக்க ஆர்வம் கொண்டிருந்தனர். ஆனால் வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி, களிமண்ணைக் கொண்டுவருவதற்கும், சூளை அமைக்கவும், விறகுகளை வாங்குவதற்கும் போதிய பணம் கிடைப்பது அவர்களுக்குத் தலைவலியை ஏற்படுத்தியது.

பணத்திற்கு உள்ளூரில் உள்ள லேவாதேவிக்காரர்களையே அவர்கள் நம்ப வேண்டியிருந்தது. அதிலும் பெருந்தொகையை வட்டியாகப் பிடித்துக் கொண்டு மீதியைத்தான் லேவாதேவிக்காரர்கள் கொடுத்தார்கள்.

அவர்கள் நிலைமையை மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பைச் சேர்ந்தவர்கள் பரிசீலித்து, அவர்களுக்குத் தலா 5000 ரூபாய் கடனுதவி அளித்தனர். அவர்கள் தொழிலை லாபகரமாகத் தொடர உதவி அளித்தது. அவர்களிடம் 10 சதவீத வட்டிதான் வசூலிக்கப்படுகிறது.

இப்போது கந்தசாமியும், பொன்னுசாமியும் மகிழ்ச்சி புன்னகையுடன் இருக்கிறார்கள். காரணம் ஆண்டு ஒன்றுக்கு 3 முறை சூளை போட்டு செங்கல்லைத் தயாரிக்கிறார்கள். தடவைக்கு 70,000 செங்கற்கள் கிடைக்கின்றன. அவர்களின் மொத்த ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய். காலாண்டிற்கு 1,150 ரூபாய் வீதம் அவர்கள் சிரமமின்றிக் கடனைத் திருப்பிச் செலுத்தி வருகின்றனர்.

முன்பு தன் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாத பொன்னுசாமி, தங்களைப்போல பிள்ளைகளும் இன்னல்களுக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகத் தன் பிள்ளைகளை நன்கு படிக்கவைக்கத் திட்டமிட்டுள்ளார்.



# தஞ்சாவூர் மாவட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சாண எரிவாயு அடுப்புகள்

நகரங்களில் கூட பெரும்பாலான மக்கள் எரிவாயு (கேஸ்) அடுப்புகளைக் காணாத நிலையில், தஞ்சை மாவட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் நூற்றுக்கணக்கான எரிவாயுத் திட்டக் கலன்கள் அமைக்கப்பட்டு சாண எரிவாயு அடுப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாநில அலுவலர் இதனைப் பார்த்து மக்களின் ஆர்வத்தைப் பாராட்டினார். பிற மாவட்ட அலுவலர்களும், மக்கள் தலைவர்களும், பொது நிறுவன நிர்வாகிகளும் பார்த்துச் செல்கின்றனர்.

5.6.85 அன்று ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திருமதி. சந்திரலேகா, இ.ஆ.ப., வருகை தந்து அம்மாப்பேட்டை ஒன்றிய அருந்தவபுரம் காந்தி கிராம மக்களுடன் உரையாடினார். குறிப்பாக இவ்வித அடுப்பைப் பயன்படுத்தும் பெண்கள் கூட்டத்தில் கலந்துரையாடி விளக்கம் கொடுத்தார்

''நீங்களெல்லாம் சாண எரிவாயு அடுப்பு போட்டிருக்கிறீர்களா?''

''3 க.மீ. காதி கமிஷன் கலன் அடுப்புதான் போட்டுள்ளோம். ஒரு கூடை சாணம் போடுகிறோம்.''

''அது எப்படிப்போதும்''?.

''நாங்கள் இருமுறை சமைக்கிறோம். இரண்டு மணி நேரம் கேஸ் போதுமானது. மூன்று மணி நேரத்திற்குமேல் கேஸ் கிடைக்கிறது. இதனால், தண்ணீர் உபயோகிக்கவும் முடிகிறது. வீட்டில் புகையில்லை. பாத்திரத்தில் புகை பிடிக்கவில்லை.''

''கூடுதல் எவ்வளவு நேரம் எரியுது?''

''5 மணி நேரத்திற்குமேல் கூட எரியுது. அதற்குச் சாணமும் கூடுதலாகப் போடுகிறார்கள்.''

''முன்பு விறகு வாங்கினீர்களே, இப்போது அதனால் லாபம் உண்டா''?

''விறகு தினமும் ஒன்றிரண்டு ரூபாய்க்கு வாங்கினோம். பல நாள் பல மணி நேரம் விறகுக்காக அலைந்து காய்ந்த சுள்ளிகளையும் பொறுக்கி வந்திருக்கிறோம். வேலி முள் திருடிவிட்டதாக சண்டை சச்சரவுகள் கூட தினமும் இருந்தது. அதெல்லாம் இப்போது பெருமளவு குறைந்துவிட்டது. முன்பு மாதம் இருபத்தைந்து ரூபாய் செலவானது. இப்போது மாதம் பத்து ரூபாய்க்கும் குறைவாக 5 வருடத்திற்கு கடன் செலுத்துகிறோம்.''

அருந்தவபுரம் கிராமத்தில் 125 வீடுகள் உள்ளன. இவற்றில் 50 பேர் வீடுகளில் சாண எரிவாயு அடுப்புகள் உள்ளன.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு மாடுகள் மானிய விலையில் கொடுக்கப்படுகிறது. மேலும், மாடு இல்லாதவர்கள் புகையில்லாச் சூளை அடுப்பு போடலாம். இதற்கு ஒரு அடுப்புக்கு ஐம்பது ரூபாய் வரை மானியம் கொடுக்கப்படுகிறது. இதிலும் விறகுச்செலவு மிச்சம். வீட்டுக்குள் புகையுமிருக்காது.

தஞ்சை மாவட்டத்தில் சாண எரிவாயு அடுப்புகள் பிரபலமாகி 1984-85 ஆம் ஆண்டில் 2274 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் காதி கமிஷன் மாடல் 1741ம், பல்கலைக்கழக மாதிரி 533ம் அடங்கும்.

2500 பேர்களுக்குமேல் 50க்கு மேற்பட்ட பயனடைவோர் பயிற்சி முகாம்களில் தீவிரப் பயிற்சி கொடுத்தது, இந்த அளவு சாதனைக்குப் பேருதவியாயிருந்தது. அத்துடன் நாகப்பட்டினம் ஒன்றியத்தில் நடத்தப்பட்ட அலுவலர் பயிற்சி முகாம்களும், கலன்களை நேரில் பார்த்துத் தெரிந்துகொண்ட செயல்முறை விளக்கப் பயிற்சிகளும் கலன்கள் அமைக்க உதவின.

'கிராம அளவிலுள்ள அலுவலர்களுடன் தொடர்ந்து நடத்திய விளக்கங்கள், விவாதங்கள், விரிவுரைகள், செய்முறை விளக்கங்கள், நேரடிப்பார்வைகள் மூலம் பல்கலைக்கழக மாதிரி அமைப்பதில் அலுவலர்களுக்கும் மக்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனை எல்லா ஒன்றியங்களிலும் அமைத்துள்ளார்கள் மன்னார்குடி ஒன்றியத்தில் மாத்திரம் 135 பல்கலைக் கழக மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

''அதிக அளவில் பிரபலமாவதற்குக் காரணமாயிருந்தது 3 க.மீ காதி கமிஷன் மாடல் ஆகும். இதை முதன்முதலில் எளிய முறையில் தயாரித்தது தஞ்சாவூர் கணேஷ் பயாகேஸ் இம்பிளிமெண்ட்ஸ் நிறுவனத்தாராவர். பின்பு பலரும் இம்மாதிரி செய்ய துவக்கியுள்ளார்கள். இதன்

டைய உத்தேச மதிப்பு ரூ. 4,500- ஆகும். பயன்படுத்துவோரை அழைத்து ''ஆறு நபர்கள் வரை சமையல் செய்யத்தக்க 3.க.மீ. சாண எரிவாயு கலன் அமையுங்கள். அதற்கு அரசு மானியம் ரூ. 2,860 - உண்டு. மீதி ரூ.1,640-ல் குழி வெட்டுதல் மற்றும் இலவச கூலியாக செங்கல், மணல், சுமந்து உதவுதல், சிமெண்ட் காங்கிரிட் பைப்புக்கு 25 நாட்கள் தண்ணீர் ஊற்றுவது மற்றும் கொத்து வேலைக்கு கையாளாய் இருங்கள். உங்கள் உழைப்பு போக மீதி கட்ட வேண்டியது ரூ.500 -க்கு குறைவாகவே இருக்கும். ரூ.500 - தேவை இருந்தாலும், அதை வங்கி மூலம் கடனாக அளிக்கிறோம். கடனை 84 மாத தவணைகளில் கூட திரும்பக் கட்டலாம். ஆக மொத்தம் ரூ.10 -க்கு குறைவாகத் திரும்பக் கட்டினால் போதும்'' என்று சொல்லுகிறோம். அது மட்டுமல்ல. இரண்டு ஆண்டு உத்தரவாதமும் உண்டு. கேஸ் வந்தபிறகு பணம் கட்டலாம்'' என்று கூடக்கூறுகிறோம். அப்படி இருந்தும் ஓரிருவர்தான் முன் வந்தனர்.

முதன்முதல் திருவையாறு ஒன்றியத்தைச் சேர்ந்த அம்மன் பேட்டை கிராமத்தில் ஆதி திராவிடர் குடிசையின் பின்புறம் ஒருவர் வீட்டில் அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட அன்றே கேஸ் வந்தது. சமையல் செய்வது கண்டு ஆச்சரியமுற்றனர் மக்கள். மக்களிடையே பெரும் ஆர்வம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து நாஞ்சிக்கோட்டை கிராமத்தில் மாடுகள் உள்ள வீடுகள் அத்தனையும் தேர்வு செய்து 52 கலன்கள் அமைக்கப்பட்டன. இதற்கு பாரத வங்கி கடன் வழங்கியதால் இத்தனையும் விரைவில் அமைக்க ஏதுவாயிருந்தது.

இதை அறிந்த அம்மாப்பேட்டை ஒன்றிய மக்கள் அம்மாப்பேட்டையிலும் மற்றும் பல கிராமங்களிலும் இதனை அமைக்க முன்வந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முயற்சியின் பேரில் இந்தியன் ஓவர்சீயர்ஸ் வங்கி, தஞ்சாவூர் கிளை, அம்மாப்பேட்டை ஒன்றியப்பகுதி அருந்தவபுரம் காந்தி கிராமத்தை தேர்வு செய்தது. அங்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பால் மாடுகள் வாங்கி பயனடைவோர் அத்தனை பேருடைய வீட்டிலும் 3 க.மீ. கொள்ளளவுள்ள சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டன. இங்கு 50 குடும்பங்களும் இதை தெய்வீக சன்மானமாகப் போற்றி வருகின்றனர். இவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஆதி திராவிட மக்கள் தான்.

அருந்தவபுரம், சாலியமங்கலம் கொக்கேரி போன்ற கிராமங்களிலும் மக்கள் முன்வந்தனர். இவ்வாறு அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் பிரபலம் அடைந்து கடந்த ஆண்டு 631 கலன்கள் போடப்பட்டன. சிமெண்ட், உருக்கு போன்றவைகளும் கட்டுப்பாட்டு விலையில் கொடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் தொழில் நுணுக்க உதவியாளர் உண்டு. அவர்களுக்கு ஒரு கலன் அமைக்க ரூ.300 வரை கொடுக்கப்படுகிறது.

சாலியமங்கலம் கிராமத்தில் மட்டும் 130 கலன்கள் அமைக்கும் வேலை துரிதமாக நடைபெறுகிறது.

சாலியமங்கலம், கொக்கேரி, திருத்துறைப்பூண்டி, திருவையாறு, பாபநாசம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 6 க.மீ. கலன்கள் மக்களை மிகவும் கவர்ந்துள்ளன. பன்னிரெண்டு பேருக்கு மேல் சமையல் செய்யக் கூடிய திறன் கொண்டதாயும், குறையாத எரிவாயு உள்ளதாகவும் அமைந்துள்ளது. இதனால் 3 க.மீ.க்கு அதிகமாக தேவை உள்ளவர்கள் 6 க.மீ. கலன்களையே விரும்பிப் போடுகிறார்கள். மன்னார்குடி, நாகப்பட்டினம், செம்பனார்கோவில், சீர்காழி ஒன்றியப் பகுதிகளில் பல் கலைக்கழக மாதிரிக் கலன்களையே விரும்புகிறார்கள்.

சாண எரிவாயு பயன்படுத்தி 5 குதிரைச் சக்தி வேக தண்ணீர் பம்புகளும், மற்றும் ஒரு குதிரை வேகச் சக்தியுள்ள மின் சக்தி மோட்டார்களை ஓட்டவும் பயன்படுத்த ஏற்பாடாகியுள்ளது.


வேதாரண்யம் குருகுலம் போன்ற தனியார் நிறுவனங்களில் பெரிய அளவில் இக்கலன் அமைக்க 75% மானியம் அளிக்கப்படுகிறது. மேலும், சமுதாய சாண எரிவாயுத்திட்ட கலன் வடபாதி, நரியனூர் (அம்மாப்பேட்டை ஒன்றியம்) ஆகிய கிராமங்களில் அமைக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

காற்றையும் சூரிய வெப்பத்தையும் பயன்படுத்தி அடுப்புகள் அமைக்கவும், நீர் இறைக்கும் இயந்திரங்கள் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இருபது அம்சத் திட்டத்தில் ஒன்றாகவும், மத்திய அரசின் தேசிய ஊரக விசைத் திட்டத்தில் முதன்மையாகவும் இருக்கும் இத்திட்டம் தேசிய வருமானத்தை அதிகரிப்பதோடு மக்களுக்கு மிகவும் பயனளிப்பதாகும்.



**மு. லஜபதி,**
**மாவட்ட ஆட்சித்தலைவரின்**
**நேர்முக உதவியாளர்,**
**தஞ்சாவூர்.**



# தீயணைப்பு வீரர்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனை

எந்த இடத்தில் எந்த நேரத்தில் தீவிபத்து ஏற்பட்டாலும் உடனே விரைந்து சென்று உதவிடும் தீயணைப்பு வீரர்கள்...

வெள்ளப்பெருக் கென்றாலும் பதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவ வீரர்களை போல் சென்று உதவிடும் பாங்கு... உயிருக்குப் போராடும் இடம் ஆபத்தை விளைவிக்கும் என்றாலும் துணிந்து சென்று சாகசங்களை நிகழ்த்திக் காட்டும் தீரர்கள்...

இரவு, பகல் எந்த நேரத்திலும் கண்துஞ்சாது கடமையைச் செய்யும் தியாகச் செம்மல்களுக்குத் தாங்கள் நிம்மதியாய் வாழ்ந்திட அவர்களுக்கென்று தனிக் குடியிருப்புகள் இல்லை.. இந்த நிலை தொடர்ந்து நீடித்தது.


மற்ற அரசு அலுவலர்கள் பெற்றுள்ளதைப் போன்ற குடியிருப்புகள்.. அவர்கள் ஒன்றாக வாழும் அந்தப் பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி ஆகியவைகளை இவர்களுக்கும் வழங்கிட வேண்டும் என்ற அன்பு ஆணை பிறப்பித்தார். இதன் அடிப்படையில் தமிழகத்தில் உடுமலைப் பேட்டை, ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் ஏற்கெனவே கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாகத் தியாகச் செம்மல் பெருந் தலைவர் காமராஜர் பெயரால் அமைந்துள்ள காமராஜர் மாவட்டத்தில் இவர்களுக்கென 40 வீடுகளைக் கொண்ட குடியிருப்புகள் ரூபாய் 14 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழா 11.7.85 அன்று சிவகாசியில் நடைபெற்றது.

சிவகாசியில் வாழும் தீயணைப்பு வீரர்கள் குடும்பத்தார், குழந்தைச் செல்வங்களிடையே குதூகலம்! பூரிப்பு! தாங்களும் வசதியுள்ள குடியிருப்புகளில் குடியிருக்கச் செல்லுகிறோம் என்பதில்!

இந்தக் குடியிருப்புகளின் திறப்பு விழா குறித்த நேரத்தில் துவங்கியது. மாண்புமிகு அமைச்சர்களை தீயணைப்புத் துறையினர் இன்னிசை முழங்க வரவேற்று, காவல் துறை மரியாதை அளித்தனர். விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசிய தீயணைப்புத் துறை இயக்குநர் திரு சீதாராமன், ஐ.பி.எஸ். அவர்கள் ''தமிழக முதல்வர் அவர்களின் விருப்பப்படி இத்துறை கூடிய விரைவில் நவீன மயமாக்கப்படும். அனைத்து நிலையங்களுக்கும் புதுப்பிக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள வாகனங்கள் அளிக்கப்படும். இதில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாழ்க்கை வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும்.'' என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது—

''பட்டாசுத் தொழில், தீப்



பெட்டித் தொழில் நிறைந்த சிவகாசியில் தங்கள் உயிரையும் பணயம் வைத்து விபத்துக்களைத் தடுக்கும் இந்தத்துறை வீரர்களுக்குத் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலேயே மூன்றாவது இடமாக சிவகாசியைத் தேர்ந்தெடுத்து இந்த 40 குடியிருப்புகளை ரூபாய் 14 இலட்சம் செலவில் கட்டித் தந்துள்ளார்கள். இங்குள்ளவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ அவர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி, மின்விசிறிகள் போன்றவை இக் குடியிருப்போருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இது போன்ற நன்மைகள் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் மூலம் தொடர்ந்து கிடைக்கும்'' என்றார்.

விழாவில் கலந்து கொண்டு புதிய குடியிருப்பு மனைகளைத் திறந்து வைத்து மாண்புமிகு அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு டி.இராமசாமி அவர்கள் பேசும்போது, ''தமிழகத்தில் தற்போது 131 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. விரைவில் மேலும் 34 நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. தற்சமயம் இத்துறையில் 4750 வீரர்கள் பணி புரிகிறார்கள். இத்துறையில் உள்ள குறைகள் எல்லாம் நீக்கப்பட்டு, நவீனமயமாக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் விரும்புகிறார்கள். புரட்சித்தலைவர் ஆட்சி வந்த பிறகுதான் இத்தகைய குடியிருப்பு மனைகள் கட்டித்தரப்படுகின்றன. நிதி ஆதாரத்திற்குத் தக்கவாறு மேலும் பல இடங்களில் இத்திட்டம் இனி விஸ்தரிக்கப்படும். இவர்களது பணியினைப் பாராட்டிடும் வகையில் நமது முதல்வர் அவர்கள் சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற நாட்களில் இவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பிக்கிறார்கள். நல்ல நிலையில் உள்ள வாகனங்கள், விரைவில் வழங்கப்படும். ராமேஸ்வரம் போன்ற தீவுக்கெல்லாம் கூட புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் இத்துறை அலுவலகம் திறக்கப்பட்டது. இதையெல்லாம் எண்ணி, நன்மைகள் நாள்தோறும் செய்து வரும் புரட்சித்தலைவர் அரசுக்கு நாம் அனைவரும் நல் ஆதரவு தருவோம்'' என்றார்.

விழாவில் சிவகாசி தீயணைப்பு நிலையத்திற்குத் தொலைக்காட்சிப் பெட்டியும், விருதுநகர், ராஜபாளையம், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், காரைக்குடி தீயணைப்பு நிலையங்களுக்கு வானொலிப் பெட்டிகளும் ஸ்ரீவில்லிப்புத்தூர், இராமநாதபுரம், காரைக்குடி, பரமக்குடி, சிவகங்கை, தேவகோட்டை, அருப்புக்கோட்டை ஆகிய நிலையங்களுக்கு மின் விசிறிகளும் வழங்கப்பட்டன.

விழாவில் கலந்து கொண்டு சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு சவுந்திரராஜன், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு இரத்தினசபாபதி, சட்டமன்ற மேலவை உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி, சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டு பேசினார்கள். விழா முடிவில் திரு ப.அனந்தசேகர் நன்றி கூறினார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு:

**ரெ. இராவணன்,**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) காமராஜர் மாவட்டம்.**

## தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

சமுதாயத்தில் சமூக, பண்பாட்டு, அரசியல் விழிப்புணர்ச்சியினை மக்களிடையே ஏற்படுத்தி மக்களாட்சி மரபுகளையும், நிறுவனங்களையும் வளர்ப்பதில் பத்திரிகையாளர்களின் பணி மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இப்பணியினை ஆற்றிவரும் பத்திரிகையாளர்கள ஓய்வு பெற்ற பின்னர், வயதான காலத்தில் தங்கள் வாழ்க்கையினைச் சீராக நடத்த இயலாமல் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். எனவே அவர்களுக்கு உதவி செய்யும் நோககத்தில் தமிழக அரசு, ''தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத் திட்டம்'' ஒன்றினைக் கொண்டுவர முடிவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 1200 பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்தி நிறுவனங்கள் உள்ளன. இம்மாநிலத்தில் ஏறத்தாழ 6000 பத்திரிகையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் இத் திட்டம் கொண்டுவரப்படுகிறது.

**விறகில்லை..தீயில்லை.. புகையுமில்லை!**

# நளபாகத்திற்கோர் நவீன அடுப்பு

**வி**றகு இல்லாமல், தீயில்லாமல் தேநீர் தயாரிக்க முடியுமா?

தேநீர் மட்டுமல்ல, கடலை வறுக்கலாம், பால் பாயசம் செய்யலாம்; ஏன்? அறுசுவை உணவும் அழகாய்ச் சமைக்கலாம் எப்படி?

சூரிய ஒளியில்! ஆம். சூரிய அடுப்பில்!

இந்த அடுப்பை எப்படித் தயாரிக்கிறார்கள்? அதில் எப்படி சுவையான உணவு சமைக்கிறார்கள்?

அதை நேரில் காண 15-6-85 அன்று செய்தியாளர் கூட்டம் சென்னை ஆவடியிலுள்ள முருகப்பா தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்றிருந்தோம்.

அங்குச் சூரிய அடுப்புகளைத் தயாரிக்கின்ற காட்சியைக் கண்டோம். அதுமட்டுமல்ல சூரிய அடுப்பில் தயாரிக்கப்பட்ட தேநீரையும் சுவைத்துக் குடித்தோம்; உணவு வகைகள் சமைப்பதையும் பார்த்து வியந்தோம்.

இதுபற்றிக் கல்லூரி முதல்வர் திரு ஜி. வைத்தியலிங்கம் கூறினார்—

''தமிழ்நாட்டில் இதுவரை 900 சூரிய அடுப்புகள் தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளன. சாதாரணமாக சூரிய வெளிச்சமுள்ள நாட்களில் சுமார் 1½ மணி முதல் 2 மணி நேரத்தில் இந்த அடுப்பைப் பயன்படுத்தி உணவு தயாரித்து விடலாம். 5 பேர் கொண்ட குடும்பத்துக்குப் பயன்படக்கூடிய அளவுக்குச் சிறிய பெட்டி போன்று இந்த அடுப்புகள் தயாரிக்கப்படுகின்றன. காபி, டீ போன்ற பானங்களைக் கூட 20 நிமிட நேரத்தில் தயாரித்து விடலாம். இறைச்சி போன்றவற்றைக்கூட இந்தஅடுப்பில் சமைத்து விட முடியும்.

''பல மாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் கூட இதைப் பயன்படுத்த முடியும். எந்த விதச் சத்து இழப்பும் ஏற்படாமல் சத்துள்ள உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்ய முடியும். அடி பிடிப்பது, பொங்கி வழிவது போன்ற பிரச்னைகளும் ஏற்பட வழி இல்லை. இரவுக்கான சமையலை மாலை 4 மணி அளவுக்கே முடித்துவிட்டாலும், அப்படியே அடுப்பில் வைத்து இருந்தால் இரவு வரை சூடாகவே இருக்கும். நிலக்கடலை போன்றபொருட்கள் கூட இதில் வறுக்க முடியும்.

''சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்பதுடன், கிராமப் புறங்களில் விறகு போன்ற எரிபொருளுக்காகக் காட்டுப் பகுதிகளில் மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்க்க முடியும்.''

சூரிய வெப்ப அடுப்பை விற்பனை செய்துவரும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தனி அலுவலர் திரு பி. கன்னியப்பன் கூறுகையில்—

''நடப்பு ஆண்டில் 5 ஆயிரம் சூரிய வெப்ப அடுப்புகளை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

''அடுப்பெரிக்க மரங்களை வெட்டுவது, அதிக அளவில் கிராமங்களில் நடைபெற்று வருவதை இந்த அடுப்புகளை கிராமப் புறங்களில் பிரபலப்படுத்துவதன் மூலம் தடுத்து நிறுத்த முடியும் என்பதால், கிராமப் பகுதிகளில் இந்த அடுப்புகள் பற்றிப் பிரசாரம் செய்யப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

''வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் விளம்பரங்கள் மூலம் இந்த அடுப்பு பற்றி விளம்பரப்படுத்தத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அடுப்பை வாங்க பாரத ஸ்டேட் வங்கி மூலம் கடன் வழங்கப்படுவதுடன், அரசு ஊழியர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவது பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இணையத்தின் மாவட்டத் தலைமை விற்பனையகங்களில் இந்த அடுப்புகள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அலுமினியத் தகடு கண்ணாடி இவைகளைக் கொண்டு எளிமையாக எல்லோரும் உபயோகிக்கக் கூடிய வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டில் 300 நாட்கள் வரை சூரிய ஒளியில் சமைக்கலாம்.

**சமைப்பது எப்படி?**


1. வாசலில் வெட்ட வெளியில் சூரியனைப் பார்த்தபடி, வைக்க வேண்டும்.


2. அதிலுள்ள எதிரொளிக்கும் பகுதியிலிருந்து எதிரொளிக்கும் சூரியக் கதிர்கள் அடுப்புக்குள் விழுமாறு கொடுக்கப்பட்டுள்ள தாங்கியில் பொருத்த வேண்டும்.

3. ஒளிக்கதிர்கள், எதிரொளிக்கும் ஆடியில் பட்டு கீழுள்ள இரட்டைக் கண்ணாடி வழியே கறுப்பு வண்ணம் அடித்த பெட்டிக்குள் செல்லும். சூரிய அடுப்பின் மேல் எந்த நிழலும் படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. கொடுக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் சமைக்க வேண்டிய பொருளை வைத்து, கண்ணாடியைத் தூக்கி அதனுள் இதை வைக்க வேண்டும்.

5. கறுப்பு வண்ணம் பூசப்பெற்ற பாத்திரத்தில் மட்டுமே சூரிய அடுப்பில் சமைக்க வேண்






டும். கண்ணாடிக் கதவைக் குறிப்பிட்ட நேரம் மூடி வைக்க வேண்டும்.

கவனிக்க வேண்டியவை:

1. சூரிய அடுப்பு கல்லில், சுவரில் மோதக்கூடாது.

2. அடுப்பு மழையில் நனையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. உபயோகிக்கும் முன் பெட்டியையும் கண்ணாடியையும் நன்கு துடைக்க வேண்டும்..

4. ஆண்டுக்கொரு முறை கறுப்பு வண்ணம் பூசவேண்டும்.

ஐந்து பேர் உள்ள குடும்பத்திற்கு வேண்டிய சமையல் இந்த அடுப்பில் செய்யலாம். பிரஷர் குக்கரில் வைப்பது போல் அரிசி, காய்கறி, பருப்பு வகைகளையும் ஆட்டுக்கறி, கோழிக்கறிபோன்ற பொருள்களையும் வேண்டுமளவு நீர் சேர்த்து, பாத்திரத்தில் வைத்துஇவ்வடுப்பில்வைத்து கண்ணாடிக் கதவை மூடிவிட்டு, சூரிய ஒளி இதன் மீது விழச் செய்ய வேண்டும். இவ்வடுப்பின் மேல் மூடியில் உள்ள நிலைக் கண்ணாடி மேலும் சூரியஒளியை இவ்வடுப்பில் விழச் செய்கிறாற் போல் அமைக்க வேண்டும். சுமார் முக்கால் மணியிலிருந்து ஒன்றே கால் மணி நேரத்தில் சமையல் முடிந்து விடும்.

காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை சமையல் செய்யலாம். இரவுக்கான சமையலைச் செய்து, அப்படியே மூடியை அடைத்து விட்டால், இரவு எந்நேரம் வேண்டுமானாலும் சூடான உணவு கிடைக்கும்.

கடலையை உடைக்காமல் உள்ளே பரப்பி வைத்தால் சுமார் முக்கால் மணியில் வறுக்கப்பட்ட கடலை கிடைக்கும். (அவ்வாறு வறுக்கப்பட்ட கடலையை எல்லோரும் சுவைத்துப் பார்த்தோம்)

வெப்பம் ஒரே சீராக உணவின் எல்லாப் பக்கங்களுக்கும் கொடுக்கப்படுவதால், உணவுப் பொருட்கள் மிக நன்றாக வேக வைக்கப்படுகின்றன.

140 டிகிரி வெப்பத்திற்கு மேல் சூடுபடுத்தப்படாது இருப்பதால், எல்லாவிதமான வைட்டமின்களும் உணவில் தக்கவைக்கப்படுகின்றன. சில முக்கிய வைட்டமின்கள் மற்ற அடுப்புகளில் சூடு படுத்தப்படும் பொருட்களிலிருந்து ஆவியாக வெளியேறி வீணாகி விடுகின்றன.

புது வீடு கட்டுபவர்கள் சமையல் அறையைத் தென்புறம்கட்டி ஒரு சமையல் அறை மேடை வெளிப்புறமும் வைத்து, உள் மேடைக்கும் வெளிமேடைக்கும் இடையில் ஒரு கதவு பொருத்த வேண்டும். சூரிய அடுப்பை மேல் மூடியை நீக்கி விட்டு, மேசை இழுப்பறை போன்று வெளியே தள்ளியும், சமையல் முடிந்தவுடன் உள்ளேயும் இழுத்துக் கொள்ளலாம். இந்த இடங்களில் நிலைக் கண்ணாடியை வெளிப்புறம் ஒரு நிலையான இடத்தில் பொருத்திவிட வேண்டும். இந்த அமைப்பினால் பெண்கள் வெய்யிலில் நிற்காமல் சமையலை முடித்துக் கொள்ளலாம்.

சூரிய அடுப்பினால் என்ன நன்மை?

நெருப்போ, எரிபொருளோ தேவையில்லை. உணவு காய்ந்து தீய்ந்து போகாது. எந்தவித அபாயமும் இதில் இல்லை. அடுப்பு நீண்டகாலம் உழைக்கவல்லது. எரிபொருள் செலவில்லாத சமையல். புகை, தூசியற்ற உணவு நமக்குக் கிடைக்கும். வேகாதிருத்தல், அதிகம் குழைந்து கஞ்சி போலாதல் ஆகியவை சூரிய அடுப்புச் சமையலில் இராது. பண்டங்கள் ஊசிப்போகாது.

இவ்வாறு எல்லா வகையிலும் சூரிய அடுப்பானது சுவையான சமையலுக்கு மட்டுமல்லாது, சுறுசுறுப்பான, சூடான சமையலுக்கும் ஏற்றது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடவேண்டும்.

**பி.வி. கிரி**



## விளையும் பயிர்

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயிலும் மாணவர் டி. தட்சிணாமூர்த்தி. இவர் படிப்பில் மட்டுமல்ல, கதை, கட்டுரை, கவிதை எழுதுவதிலும் ஆர்வங்காட்டுகிறார். அத்துடன் விளையாட்டுகளிலும் பரிசுகள் பெற்றுப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்.

## மாணவர் பக்கம்

## சூரிய ஒளி மூலம் சிகிச்சை

சோவியத் நாட்டில், சூரிய ஒளியைக் கொண்டு நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் இரு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கண்ணாடிகள் மூலம் சூரிய ஒளியைப் பிரதிபலிக்கச் செய்து நோயைக் குணப்படுத்தும் முறையை அடிப்படையாகக் கொண்டவை இந்த நிலையங்கள்.

குழந்தை மருத்துவர்கள் இந்த முறையைப் பெரிதும் வரவேற்கின்றனர். சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் சாதனத்தில் 200 சிறு கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவை ஒளிக் கதிர்களை ஒரிடத்தில் குவிய வைத்து, குழந்தையின் உடல் முழுவதும் அது நகர்ந்து செல்லும்படி செய்கிறது. இதனால் நோயாளியின் உடல் வெப்பப்படுத்தப்பட்டு, நோய் குணமாகிறது. இது போல் உடலின் ஆழத்தை வெப்பப்படுத்துவதற்கு வேறு முறைகளால் முடியாது. ஆஸ்துமா, மூச்சுக் குழாய் அழற்சிபோன்ற வேறு சில நோய்களைச் சூரிய ஒளியால் குணப்படுத்த முடிகிறது.


## என்ன பொருள் ?

ஈழத்தில் மட்டகளப்புப் பகுதியில் வாழும் தமிழ் மக்களிடையே வழங்கும் சில வட்டார வழக்குச் சொற்களைப் பாருங்கள்:

வாரிக்காலன் — மாடுகள்
வெள்ளோடன் — தேங்காய்
கூரைக்கோடு — வீடு
கணக்கன் — மரக்கால்
குஞ்சுவாயன் — கைப்பெட்டி
நெடு முழவன் — கயிறு

ஆதாரம்: திரு மு. சதாசிவத்தின் "தமிழில் அழகுகள்"

தகவல்: த. சீ. பாலு, பி.ஏ., சென்னைப் பல்கலைக் கழகம் (அஞ்சல்)



## மிகப்பெரிய நூல்நிலையம்

சோவியத் நாட்டில் 4 இலட்சம் நூல் நிலையங்கள் உள்ளன. மாஸ்கோவில் உள்ள வி.ஐ. லெனின் நூல் நிலையம்தான் மிகப் பெரியது.

இந்த நூல் நிலையத்தின் பரப்பளவு 1,12 000 சதுர மீட்டர்கள். இங்கு உள்ள புத்தகங்கள் அனைத்தும் ஒரு வரிசையாக வைக்கப்படுமானால் அதன் நீளம் 500 கிலோ மீட்டர் இருக்கும்.

100 ஆண்டுகளுக்கு முன் இந்த நூல் நிலையத்தில் ஒரு இலட்சம் புத்தகங்கள் இருந்தன. அதன் ஒரே படிப்பு-அறையில் 20 பேர் மட்டுமே உட்கார்ந்து படிக்க முடியும். இப்போது இந்த நூல் நிலையத்தில் 3.4 கோடிப் புத்தகங்களும், பத்திரிகைகள் மற்றும் இதழ்களின் ஆண்டுக் கோப்புகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

உலகத்தின் பல்வேறு மொழிகளிலுள்ள லெனின் நூல்கள் மிக அதிகமான அளவில் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் எண்ணிக்கை மொத்தம் 50,000 பிரதிகளாகும். லெனின் சொந்தமாகச் சேமித்து வைத்திருந்த புத்தகங்களையும் இந்த நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். அன்றாடம் சுமார் 6000 வாசகர்கள் இந்த நூல் நிலையத்திற்கு வருகை தருகின்றனர்.



# "3 - டி" புத்தகம்

ஐதாராபாத், ஜூன் 24-ஆந்திராவில் ஐதராபாத், செகந்திராபாத் ஆகிய இரட்டை நகரங்களில் குழந்தைகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது முப்பரிமாண (3 டி) புத்தகங்கள்.

ஆறு ரூபாய் விலையுள்ள இந்த அதிசயப் புத்தகங்களோடு இலவசமாக காகிதக்கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன.

ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த முப்பரிமாண 'காமிக்ஸ்' புத்தகங்கள் ஒரே வாரத்தில் வெளியிடப்பட்ட 10 ஆயிரம் பிரதிகளும் விற்று விட்டன.

கண்ணாடிகளை அணிந்து கொண்டு புத்தகத்தைப் படித்தால் தான் எழுத்துக்களும், படங்களும தெரிகின்றன.

புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள படங்கள் நிஜமான உருவங்களைப் போல தோற்றமளிக்கின்றன.

முப்பரிமாண புத்தகங்களை சிறுவர்கள் விரும்பி வாசிக்குவதால் தெலுங்கிலும் முப்பரிமாண 'காமிக்ஸ்' புத்தகங்கள் விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிந்து கொள்ளுவோம்!

நம்நாட்டின் தேசிய சின்னம் "சிங்கமுள்ள ஸ்தூபி" என்பது நமக்குத் தெரியும். இதே போல வேறு நாடுகளுக்கும் தேசிய சின்னங்கள் உண்டு. அவையாவன:

| | | |
|---|---|---|
| ஆஸ்திரேலியா | — | கங்காரு |
| கனடா | — | வெள்ளை லில்லி மலர் |
| டென்மார்க் | — | கடற்கரை |
| பிரான்ஸ் | — | லில்லி மலர் |
| ஜெர்மனி | — | கார்ன் மலர் |
| ஈரான் | — | ரோஜா |
| அயர்லாந்து | — | ஷாம்ராக் மலர் |
| பாகிஸ்தான் | — | பிறை நிலா |
| ஸ்பெயின் | — | கழுகு |
| அமெரிக்கா | — | தங்கக் கம்பி |

தொகுப்பு : கே. நரசிம்மன்,
12-ஆம் வகுப்பு,
இராம் பிரகாஷ் விஜயலட்சுமி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
ஓசூர்.

# அன்னை



—பூங்கோவன்

வஞ்சகம் அற்றவள் அன்னை—அன்பை
வாரி வழங்குவதில் தென்னை
கொஞ்சும் தமிழில சொல்லும்—இன்பக்
காவியம் ஆயிரம் வெல்லும்

மலரும் அன்பின் அணைப்பு—மழை
மேகக குளிரின் இணைப்பு
நிலவும் வானும் தோற்கும்—அன்னை
நெஞ்சம் நம்மை ஈர்க்கும்.

கன்னல் சுவைதரும் மொழியாம்—கற்கும்
கல்வியில் துணைவரும் விழியாம்
இன்னல் விலக்கிடும் சுடராம்—அன்னை
இரக்க மிகுநல் வடிவாம்.



# உறுதி வேண்டும்

- நாகி -

ஷாஜி என்ற வீரர் மகா பலாக்கிரமசாலியாக விளங்கினார். அவரை பிஜப்பூர் சுல்தான் வேலைக்கு வைத்திருந்தார். ஏதோ கவனப் பிசகினால் தவறு செய்து விட்டார். இது சுல்தானுக்கு எட்டியது. மன்னித்து விடக் கூடிய சுபாவமில்லாத சுல்தான் அவரைச் சிறையில் அடைத்துவிட்டான்.

ஷாஜிக்கு ஜிஜாபாய் என்ற மனைவியும், சிவாஜி என்ற மகனும் இருந்தார்கள். சிவாஜி சிறுவனாக இருந்தாலும் தன்னுடைய தந்தையைப் போல வீரத்தில் சிறந்து விளங்கினார். தன் தந்தையைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறான் சுல்தான் என்று தெரிந்து கொண்ட சிவாஜி தன்னுடைய நண்பர்களுடன் இரவோடு இரவாகச் சிறைச் சாலைக்குச் சென்று சிறையின் சுவர்களைக் கன்னம் வைத்துப் பெயர்த்துத் தன் தந்தையை விடுவித்தார். இப்படியே அவருடைய புகழ் நாளுக்கு நாள் உயர்ந்தோங்கியது. வீரத்தின் பலனாக ராய்கட் கோட்டையையும், சிம்ஹகட் என்ற கோட்டையும் பிடித்தார்.

அக்கிரமங்கள் செய்பவர்கள் அவருக்கு அடியோடு பிடிக்காது. அவர்களையெல்லாம் நாட்டை விட்டு ஓடுமாறு செய்துவிட்டார். எல்லாப் பெண்களையும் தன்னுடைய தாயைப்போல நினைத்து மரியாதை செலுத்துவார். அவனுடைய வீர தீரங்களைக் கண்ட அப்சல்கான் வஞ்சகமாகக் கொல்ல வந்தான். வஞ்சகனைச் சும்மா விடலாகாது என்று எண்ணிய சிவாஜி புலிநகத்தால் அவனுடைய வயிற்றைக்கீறி கொன்றுவிட்டார். அப்படி அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.

இப்படி பல வகையில் அவர் சிறந்துவிளங்கியதற்குக் காரணம் தாயார், சிவாஜிக்குச் சிறு வயதிலிருந்தே பல வீரர்களின் கதையை மனத்தில் வேரூன்றச் செய்தது தான்.

சிவாஜி மாமன்னனாக முடி சூட்டிக் கொண்ட பின்னர், நல்ல பல காரியங்கள் செய்துள்ளார். நேர்மைக்கும் நாணயத்துக்கும், கண்ணியத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும், சூரத்தனத்திற்கும் திலகமாகத் திகழ்ந்தார். தவறு செய்த தன் சேனாபதி தலையை வெட்டி வீழ்த்தியிருக்கிறார்.

தாயினுடைய வார்த்தையைத் தெய்வமாக நினைப்பவர். தன் தாயின் சொல்லைக் காப்பாற்ற நாட்டையே மீட்டுத் தந்தார். இத்தனை நற்குணங்களையும் பெற்ற அவர் ஒரு சாம்ராஜ்யத்திற்குச் சக்ரவர்த்தியாக இருக்கப்பெற்றும் அவர் தாய் புகட்டிய பாடங்களை நினைவில் வைத்துக் கொண்டு அடக்கமே உருவாகத் திகழ்ந்தார்.

ஒருமுறை சிவாஜியை டில்லி சக்ரவர்த்தி ஔரங்கசீப் ஆக்ராவிற்கு வரவழைத்து அவமரியாதை செய்து அவனை வஞ்சகமாகச் சிறையில் அடைத்து விட்டான். இதையறிந்த சிவாஜியின் மந்திரி வேலைக்காரன் போல் வேடம் தரித்து ஒரு மிட்டாய்க் கூடைக்குள் சிவாஜியை உட்கார வைத்து மேலே மிட்டாயைப் பரப்பி யாரும் அறியாதவாறு யமுனை நதிக்கரைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து குதிரை மீதில் ஏற்றி பூனா கொண்டு வந்து சேர்த்து விட்டான். சிவாஜி தன்னைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் தன்னைப் போல் திறமை வாய்ந்தவர்களாகவும், புத்திசாலியாகவும் இருக்க ஆசைப்பட்டார். அப்படிப்பட்டவர்கள்தான் அவருடன் பழகினார்கள்.

ஒரு சமயம் மொகலாயப்படை பூனாவைத் திடீரென்று தாக்கியது. அப்போழுது நள்ளிரவு. சிவாஜியின் படைகள் வேறு இடத்தில் போர் செய்து கொண்டிருந்தமையால் கொஞ்சமாக இருந்தன. எதிரியை விரட்ட சிவாஜி தன்னுடைய புத்திக் கூர்மையால் ஒரு உபாயம் செய்தார். அன்று அமாவாசை கும்மிருட்டு.

நல்ல கருத்த பத்தாயிரம் எருமைமாடுகளைப் பிடித்து அவைகளின் கொம்புகளிலே, எண்ணெய் தோய்த்து எரிந்து கொண்டிருந்த தீவட்டிகளைக் கட்டி மொகலாயப் படை இருக்கும் இடத்திற்கு விரட்டி விட்டான். எரிந்து கொண்டு வருகின்ற அத்தனை தீவட்டிகளையும் பார்த்து அத்தனைப் பேரும் போர் வீரர்கள், தீவட்டி பிடித்து வருகிறார்கள் என்று நினைத்துக் கொண்ட மொகலாயப்படை வீரர்கள் அடேயப்பா இவ்வளவு பேரையும் எப்படி சமாளிப்பது என்று நினைத்து தன் இடத்தை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

காலையில் கறுப்பு கறுப்பாக நின்று கொண்டிருந்த எருமை மாடுகளின் கொம்புளிலிருந்தும் எரிந்து போன தீவட்டிகளை சிவாஜியின் வீரர்கள் சிரித்துக் கொண்டே கழற்றினார்கள். தன்னுடைய மதி நுட்பத்தாலும், புத்திக் கூர்மையாலும், தந்திர ஜாலத்தாலும் நாட்டைக் காப்பாற்றினார் சிவாஜி. வீரம் மட்டும் இருந்து பயனில்லை. மதி நுட்பத்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை இங்கு சிவாஜி உணர்த்தினார்.

அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களையும், நாட்டுக்கே தொண்டு புரிந்த தீரர்களையும், இன்னல் மலைகளை எதிர்த்துப் போராடி வெற்றி கொண்ட தியாகச் செம்மல்களையும் ஈன்றெடுத்த பாரதத் தாய்க்கு சிவாஜியும் ஒரு வரப்பிரசாதம் ஆவான்.

இந்த மாதிரி ஒவ்வொரு சிறுவர்களும் தங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். பெரிய பெரிய தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நூல் நிலையங்களில் சென்று படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். படிக்க பொறுமையில்லாதவர்கள் யாராவது நல்ல விஷயங்கள் சொன்னால் அவற்றைக் காதில் போட்டுக் கொள்ள வேண்டும். அது காதில் மட்டுமே இருக்க விடாமல், செயலிலும் இறங்க வேண்டும். நாமும் வாழ்க்கையில் நல்ல சாதனைகள் புரிய வேண்டுமென்ற எண்ணம் வளர வேண்டும். நம்முடைய வாழ்நாளை வீணாக கழிக்காமல் நாட்டுக்கு எந்த வகையிலாவது உபயோகம் இருக்க வேண்டும் என்ற உறுதி வைக்க வேண்டும்.



# வேலூரில் காயிதேமில்லத் விழா

காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் 90வது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு அரசு செய்தித்துறை சார்பில் வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவை- மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தொடங்கி வைத்தார்.


மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய்.எஸ். எம். யூசுப் அவர்களும் பங்கேற்ற இவ்விழாத் தொடக்கத்தில் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டேனியல் குணாநிதி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.


தமிழ்நாடு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் திரு. அ.க.அ. அப்துல்சமது எம்.எல்.ஏ., திரு.ஏ.சி. சண்முகம் எம்.பி. தவத்திரு ஊரனடிகள், திரு. ரூபஸ் ஜெயகரன் ஆகியோர் உரையாற்றினர்.

காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், ''காயிதே மில்லத் அவர்கள் ஒரு சமயத்திற்கோ, சமுதாயத்திற்கோ, அரசியல் கட்சிக்கோ மட்டும் சொந்தமானவர் அல்ல; நாட்டு மக்கள் அனைவருக்கும் உரியவர், வழிகாட்டியவர் என்பதால்தான் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, விழா எடுக்கிறது. அத்தகைய காரணங்களாலே

---

தமிழுக்காக, தமிழ் இனத்திற்காக பாடுபட்டு கொள்கைக்காக இருக்கின்ற-தியாகம் செய்த நல்லவர்களை நான் என்றும மறக்க மாட்டேன். விட்டுவிட மாட்டேன்.





காயிதேமில்லத் முகமது இஸ்மாயிலின் பிறந்த நாள் விழாவை யொட்டி வேலூரில் நடந்த நிகழ்ச்சியில் பள்ளிச் சிறுவர், சிறுமிகளுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் இலவசப்பாடநூல் வழங்கினார்.

தான் இங்கே கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தோரும், இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களும் கூட இந்த மேடையில் இருப்பதைப் பார்க்கிறீர்கள், என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில்—''தமிழகத்தின் தளநாயகர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சியில், காயிதேமில்லத் அவர்கள் கண்ட கனவெல்லாம் நிறைவேறும்'' என்றும் தெரிவித்தார்.

விழாத் தொடக்கத்தில் திரு. வி. கே. பழனிவேல் குழுவினரின் கிளாரினட் இசைநிகழ்ச்சி கச்சேரி நடைபெற்றது. விழா முடிவில் திரு எம்.எம்.யூசுப் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

## 1586-ல் அச்சடிக்கப் பட்ட தமிழ் நூல்

இந்தியாவில் அச்சுக்கலையை முதலில் கொண்டு வந்த போர்த்துக்கீசியர்கள், 1578-இல் தமிழ் மொழியில் அச்சிட்ட முதல் நூல் "டாக்ட்ரினா கிறிஸ்டம்". அந்நூலை அச்சிடப்பயன்படுத்தப்பட்ட எழுத்துக் கட்டைகளையே பயன்படுத்தி 1586-இல் என்ரிக் என்ரிக்ஸ் எழுதிய "தி ஃப்ளாஸ் சாங்-டோரம்" என்ற தமிழ் நூல் அச்சிடப்பட்டது. அந்நூலின் ஒரு படி இத்தாலி நாட்டின் வாடிகன்நூலகத்தில் இருப்பதைத் தனிநாயகம் அடிகள் அவர்கள் 1954-இல் கண்டறிந்தார்.

அந்த அரிய தமிழ் நூலின் ஒரு படியினை (மின் படிகள்) தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம் அண்மையில் பெற்றிருக்கிறது.

—நூலகம்

## ஊசி போட்டு நோய் நீக்கும்

உயிர்களுக்கு நோய் நீக்கும் வகை மூன்று. அவை மணி, மருந்து, ஊசி என்பன. மணியும் மருந்தும் எல்லோர்க்கும் நன்கு தெரியும். ஆனால், ஊசியைப் பற்றி நமக்குத் தெரியாது. ஊசியினாலும் நோயை நீக்குகிறார்கள் என்று சுமார் கி.பி. 1680-இல் வாழ்ந்த ஒரு சிவஞானி பாடுவது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஊசிபோட்டு மருந்தைச் செலுத்தி நோய்நீக்கம் செய்வது இந்த 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய ஓர் ஒப்பற்ற சிகிச்சை முறை. ஊசி சம்பந்தமான மற்றொரு முறை 'அகுபங்ச்சர்' என்பது. இது சீனாவில் இருந்தது என்றும், இந்தியாவில்தான் தோன்றிற்று என்றும் பலவகையாகச் சொல்வார்கள். ஆனால், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஊசியைக் குறிப்பிடுகிறார் 'பிணி குண மாற்றங்களை நன்கு அறிவோன் தயவொடு நன்மணி மருந்து ஊசியினால் நீக்கிடுமால்' என்று குறிப்பிடுகிறார். இது மேற்சொன்ன இருவகை ஊசிவகையுள் எந்த ஊசி வகையோ தெரியவில்லை. எப்படியிருந்தாலும் சரியாக 300 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் ஊசிபோடும் முறை இருந்தது என்பது இந்தச் சிவஞானியின் வாக்கால் இன்று தெரியவருவது ஓர் அரிய மருத்துவச் செய்தி.

— தமிழ்ப்பல்கலைக் கழக செய்திமலர்

## சமூக மறுமலர்ச்சியில் பெண்கள்

ஆசிரியர் : எஸ். குலசேகரன்,
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம், நார்த்தாம்பூண்டி, திருவண்ணா மலைவட்டம் (வ. ஆ.) 606 809.
விலை: ரூ. 9 பக்: 120.

பெண்ணின் பெருமையை எடுத்துரைக்கும் நூல் இது. பெண்கள் எல்லாத் துறையிலும் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் பெண்களின் இயல்புகளையும் கடமைகளையும் பல்வேறு சான்றுகளின் வாயிலாக நூல் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பெண்கள் எந்தெந்தத் துறைகளில் முன்னேறியுள்ளனர், என்னென்ன தொழில் செய்கின்றனர் என்பதையும் இல்லற வாழ்க்கையிலிருந்து நீதிமன்றங்கள் வரை பெண் இனம் பணியாற்றும் செய்தியையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

குழந்தைகளை அறிவுள்ளவர்களாக வளர்ப்பதும் பெண்ணின் கடமை என்று நிறுவியுள்ள ஆசிரியர் நமது இலக்கியங்களில் பெண்கள் பாராட்டப்பட்டுள்ளதையும் பக்தி மார்க்கத்தில் பெண்கள் உச்சம் பெற்ற செய்தியையும் சுவையுறத் தெரிவித்திருக்கிறார். சுருங்கச் சொன்னால், பெண் இனத்துக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதற்கு உதவும் நூல் இது எனக் குறிப்பிடலாம்.

## பொதுமக்களுக்கான முக்கிய சட்ட விளக்கங்கள்

ஆசிரியர் : சோ. சேசாசலம்,
வெளியீடு: நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தியாகராயநகர், சென்னை-600 017.
விலை ரூ. 9. பக்: 126.

நமது வாழ்க்கையில் நம்மைச் சூழும் சில சட்டப் பிரச்சினைகளை சான்றுகளுடன் தெளிவாக இந்நூலில் தந்திருக்கிறார் ஆசிரியர்.

நிலத்தகராறு, அத்துமீறல், திருடுதல் ஆகியவற்றிற்குக் கிடைக்கும் தண்டனைகள் குறித்தும், மிருகவதைக் குற்றங்கள் யாவை, ரயில்வே வழக்குகள் எவை, ஒருவரின் சொத்து எந்தச் சூழ்நிலையில் ஏலத்துக்குக் கொண்டு வரப்படுகிறது போன்ற பல்வேறு பிரச்சினைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

தீங்கியல் சட்டங்களின் முக்கிய கோட்பாடுகளும் விவரமாக எழுதப்பட்டுள்ளன. இந்து திருமணச் சட்டம், ஸ்ரீதனச் சொத்து பிரிக்கப்படும் விதம் மூதாதையர் சொத்து பிரிக்கப்படும் விதம் ஆகியவையும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்துகளுக்கு மட்டுமல்ல - கிறிஸ்துவர்கள், முகமதியர்கள் ஆகியோர்களுக்குரிய சட்டப் பிரச்சினைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எளிய நடையில் அமைந்துள்ள இந்நூல் - சட்டக் கல்வியைத் தமிழில் பயிற்றுவிக்கும் அருந்தொண்டிற்கு உதவியாக இருக்கும் என்று சொல்லலாம்.

## அறிமுகம்

ஆசிரியர் : இரா. ஆனந்தி,
வெளியீடு: வளர்மதி பதிப்பகம் 8-2, இராணிஅண்ணா நகர், கே.கே. நகர், சென்னை - 600 078
விலை ரூ. 7. பக். 96.

ஐம்பதுக்கு மேற்பட்ட புதுக் கவிதைகளின் தொகுப்பான இந்நூலில், சமுதாயச் சிந்தனைகளையும், அகப்பொருள் உணர்வையும், ஏழ்மையின் ஏக்கத்தையும் நெஞ்சில் தைக்கும் வகையில் எடுத்துரைத்திருக்கிறார் நூலாசிரியர்.

சுதந்தரம், இசைவு, வரதட்சணை, இலக்கு, துவளாதே ஆகிய கவிதைகள் பொருள் பொதிந்தவை. எளிய சொற்களால் இனிய கவிதை மாளிகையை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர். இந்த மாளிகையை அணி செய்வதற்கு இன்னும் சற்று வளமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திருக்கலாம்.

—சுந்தர்




## இலக்கிய இயக்கங்களும் திறனாய்வும்

ஆசிரியர் : டாக்டர் சு. பாலச்சந்திரன்,
வெளியீடு: கோமதி நூலகம், மனை எண். 474 முதல் முக்கிய சாலை, திருவான்மியூர் அண்மை வீட்டுவசதித்திட்டம், சென்னை-600 041.
விலை ரூ. 8. பக். 116

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஐரோப்பா - அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட இலக்கிய இயக்கங்கள் குறித்தே இந்நூலை ஆசிரியர் எழுதத் தொடங்கியிருக்கிறார் என்றாலும், தமிழ் இலக்கியப் பரப்பிலிருந்தும் பல்வேறு செய்திகளை எடுத்துக்காட்டித் தமது கருத்துக்கு அரண் தேடிக்கொண்டிருக்கிறார். குறிப்பாக குறியீட்டியல் பற்றி எழுதும்போது, சித்தர் பாடல்கள், மனோன்மணீயம், அருட்பா, கவிமணியின் உமர் கயாம் பாடல்கள் ஆகிய தமிழ்

இலக்கியங்களைச் சான்றுகளாக்கி விளக்கம் செய்திருப்பது மன நிறைவைத் தருகிறது.

இலக்கிய அணுகுமுறைகளை ஐந்து வகையாகப் பகுத்து, அவற்றின் கீழ் பல விவரங்களையும் விளக்கங்களையும் வழங்கியிருக்கிறார். மேற்கோள்கள், சான்றுகள், தகவல்கள் எனப் பல்வேறு சிறப்பம்சங்கள் இந்நூலில் உண்டு. பல நூல்களைப் படித்த நிறைவு, இந்த ஒரு நூலைப் படிக்கும்போது ஏற்பட்டு விடுகிறது.

—தமிழ்ப்பித்தன்

## உயர்ந்த உள்ளம்

ஆசிரியர்: தாமரைக் கண்ணன்,
வெளியீடு: பராசக்தி பதிப்பகம்;
31, சீனிவாசப்பெருமாள் கோயில் தெரு,
சென்னை-600014.
விலை: ரூ. 9 பக்கம்:112.

குழந்தைகளுக்குக் குதூகலமூட்டவும் அதே சமயத்தில் அவர்களுக்கு நல்லறிவு புகட்டவுமான நீதிக் கதைகள் நிறைய வெளியிடுதல் வேண்டும். அந்த வகையில், திரு தாமரைக்கண்ணன் எழுதிய இந்நூல் வரவேற்கக்கூடியதாகும்.

இந்நூலில் ஏழு சிறு கதைகள் உள்ளன. எல்லாம் மணியான கதைகள். மனத்துக்கு மகிழ்வளிப்பவை. பிறர்பொருளை விரும்பாமை, தவறு செய்பவனைத் திருத்துதல், தீ நட்பை வெறுத்தல், தீவினை செய்வதற்கு அஞ்சுதல், நாட்டுக்குத் தொண்டாற்றுதல், பிறர்க்கு உதவி செய்தல் போன்ற பண்புகள் கதைகளில் இழைந்தோடிச் செல்கின்றன. 'இன்ப மாளிகை' க் கதை, புத்தரின் வரலாற்றைக் கூறும் உண்மைக் கதையாகும்.

ஒவ்வொரு கதையின் முடிவிலும் கதைக்குப் பொருத்தமான திருக்குறளைக் குறிப்பிட்டிருப்பதுபொருத்தமாக அமைந்திருக்கிறது.

## இயற்கைச் சிகிச்சை

ஆசிரியர்: வித்வான் வீ. ஞானவான்,
வெளியீடு: தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம்,
மதுரை-625 020.
விலை: ரூ. 3.25 பக்கம்: 62

நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வருமுன் காக்கவும் நாம் பழகிக்கொண்டால் நல்வாழ்வு வாழலாம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்நூல்.

இயற்கை வாழ்வு, இயற்கைச் சிகிச்சை இரண்டும் இரு கண்கள் போன்றவை. இயற்கைச் சிகிச்சையின் இன்றியமையாத தன்மையை மகாத்மா காந்தியடிகளே போற்றியுள்ளார்.

இந்நூலில் இயற்கைச் சிகிச்சை பற்றிய தத்துவங்களும், உடலியல், உபவாசம், இயற்கைச் சிகிச்சை முறைகள், இயற்கை உணவு, நோயும்—சிகிச்சையும், உடல் — உள்ளப் பயிற்சிகள் ஆகிய ஏழு பிரிவுகளில் ஆசிரியர் விளக்கமாகவும் தெளிவாகவும் சிகிச்சை முறைகளைக் கூறியுள்ளார். ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய நூல்.

## விசார சாகர சுருக்கம்

ஆசிரியர்: சி. யூ. நஞ்சப்பா,
வெளியீடு: முருகானந்த நிலையம், சிங்காரம்பாளையம், (அஞ்சல்), காரமடை (வழி), 641 104, கோவை மாவட்டம்.
விலை: ரூ 4. பக்கம்: 72

சாது நிச்சலதாஸ் என்னும் பெரியோரால் இந்தி மொழியில் எழுதப்பட்டு, குத்தாலம் அ. சிவராயரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதிலிருந்து தொகுக்கப்பெற்ற நூல் இது.

பல்வேறு தத்துவங்களை உள்ளடக்கிய இந்நூலில், பிரம்மம், கர்மம் விளக்கப்படுகிறது. குரு பக்தி, மாயையின் விளக்கம், ஆத்ம விவேகம், யோக சாஸ்திரம் போன்றவை கூறப்பட்டுள்ளன.

எல்லாருக்கும் புரியும் வண்ணம் இன்னும் கொஞ்சம் நல்ல தமிழில் தந்திருக்கலாம்.

—பி.வி. கிரி

## போது அறிவுத் துணுக்குகள்

உடலுக்கும் உள்ளத்துக்கும் சக்தி தரும் யோகா ஐந்து வகைப்படும். பக்தி யோகா, ஞான யோகா, கர்ம யோகா, ராஜ யோகா, லய யோகா ஆகியன அவை. யோகாவின் மூலம் குண்டலினி சக்தியைப் பெறலாம். குண்டலினி சக்தி என்பது உலகின் அபூர்வ சக்தி. சுவாமி விவேகானந்தர் இந்த அபூர்வ சக்தியை பல்வேறு கடின யோகங்களுக்கிடையே பெற்றார்.

● ● ●

சோவியத் நாட்டிலுள்ள கிர்கியா என்ற இடத்தில் மொத்தம் பதினைந்தே டாக்டர்கள் தான் இடம் பெற்றிருந்தார்கள். அந்த நாட்டின் மக்கள்தொகை ஒரு இலட்சம். இதனில் பதினைந்தே ஆண்டில் அந்நாட்டின் மக்கள் தொகை ஐம்பதாயிரமானது. சோவியத் நாட்டின் மொத்த மலேரியா நோயும் இங்குதான் உருவானதாம். இந்த நாடு இப்போது அரசின் தீவிர கவனத்தில் உள்ளது.

● ● ●

இருதயத்திற்குள் இரத்த ஓட்டத்தின் திசை 'V' வடிவமானது. முதலில் ஆரிக்களின் வழியே கீழாகவும், பின்னர் மேல் புறமும் பாய்கிறது.

● ● ●

குழந்தை பிறந்தவுடன் முதன்முதலில் கத்தத் தொடங்கும்போது சுயமாகச் சுவாசிக்கத் தொடங்குகிறது.

● ●

உடலின் பெரிய எலும்பு, தொடை எலும்பு. அதன் நீளம் பதினெட்டு அங்குலம்.

தொகுத்தவர்:

ச. சிவப்பிரபாகரன்
இரண்டாமாண்டு எம்.பி.பி.எஸ்
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி

# கம்ப்யூட்டர் கட்டளை!



## அறிவியல் சாளரம் :

அறுவைச் சிகிச்சையிலே லேசர் ஒளிக்கற்றறையை மருத்துவர்கள் இன்னும் திறம்படப் பயன்படுத்துவதற்கு உதவும் வகையில் புதிய 'கம்ப்யூட்டர் கட்டளை' ஒன்று கணிக்கப்பட்டுள்ளது. மனிதத் தோலின் திசுக்களின் மீது லேஸர் ஒளிக்கற்றை உண்டு பண்ணிய விளைவுகளைக் கம்ப்யூட்டர் காட்டிவிடுகிறது.

குருதி வடியும் புண்ணைச் சுற்றியிருக்கும் ஆரோக்கிய நிலையில் உள்ள திசுக்களுக்கு அளவுக்கு அதிகமான லேஸர் வெப்பம் தீங்கு உண்டு பண்ணும். அதே போல் கண்ணில் அறுந்து போன இரத்த நாளத்தைச் சுற்றியுள்ள திசுக்களுக்குத் தீங்கு ஏற்படும். லேஸர் வெப்பம் தேவையான அளவுக்குக் குறைவாக இருந்தாலோ நாளங்களை இணைக்கும் வேலையைச் செய்யாமல் விட்டுவிடும்.

முன் காலத்தில் அறுவைச் சிகிச்சையின்போது வெவ்வேறு சூழ்நிலைகளில் லேஸரின் குண்டூசி போன்றிருக்கும் ஒளிக்கற்றையின் வெப்பத் திறனை எவ்வளவு பயன்படுத்தவேண்டும் என்பதை மருத்துவர்கள் ஊகித்தே அறிய வேண்டியிருந்தது. அந்த ஊகங்கள் இனி தேவை இல்லை. மிகத் துல்லியமாகக் கணித்துவிட முடியும்

இந்தக் கட்டளையை உருவாக்குகையில் ஒரு சிக்கலைத் தீர்க்க வேண்டியதாயிற்று. முன்ஆராய்ச்சியாளர்கள் தீர்க்கத் தவறிய சிக்கல் இது. லேஸர் ஒளிச் சிதறுதல் வெப்பம் உட்கொள்ளுதல், வெப்பம் பரவுதல் உடலின் திசுக்களின் பல்வேறு நிலைமைகள் ஆகியவற்றை அனைத்தும் ஒரு கணித நியதிக்குள் திணிக்க வேண்டும். அறுவை நடந்து கொண்டிருக்கையில் கண் இமைக்கும் நேரத்தில் முடிவெடுத்துப் பயன்படுத்தக் கூடியதாக அதுஅமைய வேண்டும்!

கம்ப்யூட்டர் பொறி ஒன்றுதான் இவ்வளவு குறுகிய நேரத்தில் இதனைச் செய்யவல்லது. எனவே பெரிய மருத்துவமனைகளில் சாதாரணமாகக் காணப்படும் மைக்ரோ கம்ப்யூட்ட்ர் ஏற்கக் கூடியதாக ஒரு கட்டளை கணிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணிப்பினைப் பயன்படுத்தி, ''டிஃபரன்ஸ் இக்வேஷன்ஸ்'' என கூறப்படுவதிலிருந்து ஒரு எண்ணை எடுத்து, லேஸரின் ஆற்றல் அளவு ஒளிக்கற்றை வீச வேண்டிய நேரம், அதன் விட்டம் அதாவது அதன் ஒளி பாயும் இடத்தின் அளவு போன்ற லேஸரின் பல்வேறு மாறுபாடுகளைக் கட்டுப்பாடு செய்யும் கம்ப்யூட்ட்ர் கட்டளைத் தயாரிக்கப்பட்டது பல்வேறுமாறுபாடுகள் குறிப்பிடப்பட்டு விட்டால் கம்ப்யூட்டர் திரையில், உடல் திசுக்களில் லேஸரின் விளைவு அப்படியே படம்போட்டுக் காட்டப்படுகிறது.

மருத்துவர்கள் அறுவை செய்கையிலேயே திரையில் இதனைப் பார்க்க முடிகிறது. திசுக்களின் மேலேயும் அடியிலும், ஆழமாகவும் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதை அவர்கள் உடனே உணர முடிகிறது.

மருத்துவத் தொழிலில் கம்ப்யூட்ட்ர் சர்வசாதாரணமான கருவியாக விளங்கப்போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

லேஸர் அறுவைச் சிகிச்சையின் வெற்றி மருத்துவரின் திறமையில் தான் இருக்கிறது. உங்களுக்குப் பதிலாக அது செயல்படாது!

கலிஃபோர்னியா மருத்துவரான லாரிமோர் கம்மின்ஸ், கலிஃபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியரான மைக்கேல் நாயென்பெர்க் ஆகிய இருவரின் முயற்சியால் கம்ப்யூட்டர் கட்டளை உருவாகியுள்ளது.

## சோழவரத்தில் பள்ளிக் கட்டடங்கள் திறப்பு விழா.

செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரித் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் புதிய சமூகக்கூடம், பள்ளிக் கட்டடங்கள் திறப்பு விழா 16-7-85 அன்று நடந்தது.

செம்பிலிவரத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமூகக் கூடத்தையும், ஜெகந்நாதபுரம் மற்றும் காரனோடையில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கட்டடங்களையும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்று இராமலிங்க அடிகளார் சொன்னது போல, புரட்சித் தலைவர் அவர்கள் மக்கள் பசிப்பிணி போக்கும் வகையில் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அது எல்லாரும் போற்றக் கூடிய வகையிலே சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

''குழந்தைகளை மழை, வெய்யில் பாதிக்கக்கூடாது என்பதற்காக கிராமங்கள்தோறும் பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை மட்டுமல்ல, கிராம மக்கள், நலவாழ்வு வாழ்ந்திட குடிநீர், மருத்துவமனை, சாலை, மின்வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன'' என்று குறிப்பிட்டார்.

காரனோடையில் நடந்த விழாவில், நலிந்த நெசவாளர்கள் 120 பேர்களுக்கு, பாரத ஸ்டேட் வங்கி வழங்கிய கடன் தொகைகளை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே.பி. குலசேகரன், சைதை கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ஆர். சௌந்தரபாண்டியன், காஞ்சிபுரம் திட்ட அலுவலர் திரு எஸ். டி. சாமுவேல், பொன்னேரி சைதை கோட்டாட்சித் தலைவர் திரு வை. மூர்த்தி, சோழவரம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு என். குப்புசாமி ஆகியோர் கிராம வளர்ச்சிப் பணிகள் பற்றிப் பேசினர்.

●

## எ. சித்தப்பட்டி சமுதாய மன்றக் கட்டடம் திறப்பு விழா

திருச்சி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் எ. சித்தப்பட்டி சமுதாய மன்றக் கட்டடத் திறப்பு விழா 6-7-85 அன்று நடந்தது.


கரூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ஜி. ராமநாதன் வரவேற்புரை ஆற்றினார். மருங்காபுரித்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே. சோலைராஜ் தலைமை தாங்கினார்.

மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்திரு சிவசூரியன், திருச்சி (தாட்கோ) மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு வி. கனகசபை, முன்னாள் பெருந்தலைவர் திரு வி. ரெங்கசாமி, மணப்பாறை வட்டக் குழுத் தலைவர் திரு. வி. கோபால்சாமி, முன்னாள் உதவிப் பெருந்தலைவர் திரு. வி. சுவாமிநாதன், ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சுப்புரெத்தினம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. அ. அருணாசலம் அவர்கள் சமுதாய மன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்து, எ. சித்தப்பட்டி காலனிக்கு வானொலிப் பெட்டி வழங்கியும், நல்லாம்பிள்ளை புதூர் ஆதிதிராவிடர்களுக்கு 41 மனைப்பட்டாக்களை வழங்கியும் சிறப்புரை ஆற்றினார்.

ஆணையர் திரு ஆர். பாலகிருஷ்ணன் நன்றியுரை கூறினார்.

●



பெரம்பலூர் வட்டம், அத்தியூர் கிராமத்தில் தீயினால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் மனைப்பட்டா வழங்கினார்.



# பால் பற்றாக்குறை போக்கிட..

முதன்முறையாக சென்னை அண்ணாநகரில் 'ஆவின்' நுகர்வோர் சந்திப்புக் கூட்டம் 14-7-85 அன்று சிறப்பாக நடந்தது. இக்கூட்டத்தில் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து நுகர்வோர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு. க. கலைமணி அவர்கள் நுகர்வோர்களை நேரிடையாகச் சந்தித்துக் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

பாலின் தரம், அளவு குறித்தும், பால் குறித்த நேரத்தில் கிடைக்காதது குறித்தும் பலர் தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள். பால் விநியோகம் பால் பொருட்களின் தரம் பற்றிப் பலர் மன நிறைவு தெரிவித்தார்கள். எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் அளித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பேசினார்கள்.

'ஆவின்' பொது மேலாளர் திரு ஜலால் பேசும்போது 'ஆவின்' பாலின் தரத்தையும், கவர்களில் பால் கசிவதையும், தாமதமாகக் கிடைப்பதையும் போக்கத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்'' என்றார்.

பால் விநியோக அலுவலர்கள் திரு அலி, திரு கோபால் ஆகியோர் பேசும்போது ''அரும்பாக்கம், டி.பி.ஐ. வளாகம் போன்ற இடங்களில் புதிய பார்லர்கள் திறக்கப்படும். அண்ணாநகர், அண்ணாசாலை, அடையாறு அல்லது பெசண்ட் நகர், மயிலாப்பூர் ஆகிய இடங்களில் எந்த நேரத்திலும் பால் கிடைக்கும்படியாகப் புதிய ஆவின் பார்லர்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்றனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு க. கலைமணி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நிறைவுரையாற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்;

''நடப்பு ஆண்டில் பால் விநியோகம், பால் பொருட்கள் மூலம் 60 கோடி ரூபாய் விற்பனை நடைபெறும். மக்களுக்கு ஆவின் மூலம் கிடைக்கும் பால் தரமானதாகவும் தாமதமின்றியும் கிடைக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

''சென்னையில் தற்போது 23 சதவீத அளவு பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இது மேலும் விரிவாக்கப்படும். இதில் வரும் மார்ச்சு மாதத்திற்குள் 125 தானியங்கிப் பால் வழங்கும் நிலையம் ஏற்படுத்தப்படும்.

''சென்னையில் பால் பற்றாக்குறையைப் போக்க ரூ. 6 கோடிச் செலவில் தென் சென்னையில் மூன்றாவது பால் பண்ணை ஏற்படுத்தப்பட உள்ளது. அதன் மூலம் 4 லட்சம் லிட்டர் பால் மக்களுக்குவிநியோகிக்கப்படும்.''


விழாவில் ஆவின் துணைப் பொதுமேலாளர் திரு தனராஜ், திரு சூரியநாராயணா, மக்கள் தொடர்பு அலுவலர் திரு சிவகாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்றைய கருத்தரங்கு, வளமான வெண்மைப் புரட்சிக்கு வழிவகுக்கும் என்பதைச் சொல்லாமல் சொல்லியது.

பி.வி.ஜி.

# பூ. கணேசன் மறைந்தார்

சுகாதாரத் துறையில் - காச நோய்த் தடுப்பு விளம்பர அலுவலராகவும், குடும்ப நலத்துறை விளம்பரப் பிரிவு துணை இயக்குநராகவும், அரசு செய்தி-விளம்பரத் துறை துணை இயக்குநராகவும் இருந்தவரும்-தந்தை பெரியார் நூற்றாண்டு விழா தனி அலுவலராகச் சிறப்புறப் பணியாற்றி வந்தவருமான திரு பூ. கணேசன் அவர்கள் 10.7.85 இரவு 9 மணியளவில் கடலூரில் இயற்கை எய்தினார்.



இவர் 30.8.1923-ல் பிறந்தார். இவரது தந்தையார் திரு ந. பூவராகன் அவர்கள் பதிவாளராகப் பணிபுரிந்தவராவார். தந்தையார் போலவே திரு பூ. கணேசன் அவர்களும் சுய மரியாதைக் கொள்கையில் பெரிதும் பற்றுக் கொண்டிருந்தவராவார். மிகச் சிறந்த கவிஞராக-எழுத்தாளராக- பேச்சாளராகத் திகழ்ந்த இவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று எம்.ஏ. பட்டம் பெற்றவர். திராவிட இயக்கத்தின் அடிச்சுவட்டில் 'நிலவு' என்றொரு பத்திரிகையை நடத்தியவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர்.

எப்போதும் சிரித்த முகமும், இன்சொல்லும் உடையவராக இருந்த இவர், அயராத உழைப்புக்குச் சொந்தக்காரரும் ஆவார். இதன் காரணமாகவே வேலையினின்றும் ஓய்வு பெற்ற பின்னரும் அரசால் காசநோய்க் கழகத்தில் நிரந்தரச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அது வரை அப்பதவிக்குக் கௌரவ ஊதியம் ரூ.300 என்றிருந்த நிலை, தமிழக அரசால் இவர் தகுதிக்கேற்ப மாற்றப்பட்டது. அரசுப் பதவியிலிருந்தபோது அளிக்கப்பட்டதற்குக் குறையாமல் ஊதியம் வழங்கப்பட்டது.

கல்லூரிப் படிப்பை முடித்த அடியோடு தந்தை பெரியாரின் 'விடுதலை' நாளேட்டில் துணையாசிரியர் பொறுப்பிலும் இருந்தவரான திரு பூ. கணேசன் அவர்களின் துணைவியார் பெயர் திருமதி க. பழனியம்மாள். வெற்றிமணி, அன்புமணி, நிலவுமணி, செல்வமணி ஆகிய புதல்வர்களும் பூங்கொடி, தேன்மொழி, மல்லிகா ஆகிய புதல்விகளும் இவர்களுக்கு உண்டு. புதல்வர்களுள் ஒருவரான டாக்டர் வெற்றிமணி சில ஆண்டுகளின் முன் மறைவெய்தினார்.

தனது 63-வது வயதில் இயற்கை எய்திய திரு பூ. கணேசன் அவர்களின் மறைவால் வாடும் அவர்தம் குடும்பத்தார்க்குத் 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

—ஆசிரியர்



தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணிகளை மேலும் 2 ஊராட்சிகள் மற்றும் 23 நகராட்சி மன்றங்களுக்கு விரிவுபடுத்தி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

சுகாதாரமற்ற சூழ்நிலையில் மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்யவும் குடிசைவாசிகளுக்குக் குடியிருப்பு வசதி அளிக்கவும் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

குடிசை மாற்று வாரியப் பணிகள் இதுவரை சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், ஈரோடு, ஸ்ரீரங்கம் மற்றும் 9 இடங்களில் நடந்து வந்தன.

தற்போது விரிவாக்கப்பட்ட நகராட்சிகளில் வடார்க்காடு மாவட்டம் வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், அரக்கோணம், தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம், சிதம்பரம், கடலூர் ஆகியவை அடங்கும்.

# பப்பாளி மிட்டாய்

ஓர் ஆண்டிற்குப் பப்பாளி ஒரு ஏக்கருக்கு 60 டன் வீதம் விளைகிறது. இருப்பினும், பலவிதக் காரணங்களால் நம்மிடையே அதிகமாக விரும்பிச் சாப்பிடப்படுவதில்லை. பப்பாளி உணவு செரித்தலுக்கு மிகவும் இன்றியமையாததாகும். மேலும் மூல நோய், ஈரல், கணயம் மற்றும் அஜீரணம் சம்பந்தப்பட்ட கோளாறுகளுக்கும் பப்பாளி உண்பது சிறந்ததாகும். பப்பாளியில் உயிர்ச்சத்துக்களும், தாது உப்புக்களும் அதிகமாக உள்ளன. பப்பாளிக்காய் மற்றும் பழத்திலுள்ள உணவுச் சத்துக்களின் விவரம் வருமாறு

| சத்துக்கள் | காய் | பழம் |
|---|---|---|
| புரதம் (கிராம்) | 0.7 | 0.6 |
| கொழுப்பு (கிராம்) | 0.2 | 0.1 |
| சக்தி (கிலோ.கலோரி) | 27.0 | 32.0 |
| கார்போ ஹைடிரேட் (கிராம்) | 5.7 | 7.2 |
| சுண்ணாம்புச் சத்து (மி.கி.) | 28.0 | 17.0 |
| பாஸ்பரஸ் (மி.கி.) | 40.0 | 13.00 |
| இரும்பு (மி.கி.) | 0.9 | 0.5 |
| கரோட்டின் (மியுள் கிராம்) | 0. | 666 |
| தயாமின் (மி.கி.) | 0.01 | 0.04 |
| ரைபோபிளேவின் (மி.கி.) | 0.01 | 0.25 |
| நையாசின் (மி.கி.) | 0.1 | 0.2 |
| வைட்டமின் சி (மி.கி.) | 12 | 57 |

'பப்பெய்ன்' என்ற பொருள் பப்பாளிக் காயிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது மருந்துப் பொருள்களுக்கு மிகவும் பயன்படுகிறது. பப்பாளிக்காய் மற்றும் பழத்திலிருந்து பலவிதமான உணவுப் பொருட்களையும் தயாரிக்கலாம்.

கடைகளில் 'டியூட்டி புரூட்டி' என்று விற்கப்படும் பப்பாளி மிட்டாயும் (Papaya Candy) தயாரிக்கலாம். எப்படி?

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| முதிர்ந்த பப்பாளிக்காய் | 1. |
| சர்க்கரை | தேவையான அளவு |
| எஸ்ஸென்ஸ் | தேவையானது |

**செய்முறை:**

நன்கு முதிர்ந்த பழுக்காத பப்பாளிக் காயை மரத்திலிருந்து பறித்தவுடன் அதன் மீது சில கீறல்களைச் செய்து பாலை வடிய விடவும். நன்றாகக் கழுவி விட்டு, தோல், கொட்டைகளை நீக்கவும்; தேவையான அளவிற்குச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்; நறுக்கிய துண்டுகளை 2 சதவீதம் உப்பு, 1 சதவீதம் கால்சியம் குளோரைடு கலந்த குளிர் நீரில் அரை மணி நேரம் ஊறவிடவும். ஊறிய காய்த் துண்டுகளைக் கழுவி விட்டு அதன் எடையில் பாதியளவு சர்க்கரை சேர்க்கவும்.



சர்க்கரை கலந்த காயைச் சிறிது நேரம் வேக விடவும் (5 நிமிடம்). நான்கு மணி நேரம் கழித்து மேலும் சிறிது சர்க்கரை சேர்த்து கொதிக்கவிட்டு இறக்கவும். தேவையான எஸ்ஸென்ஸ், கலர் 1 சதவீதம் சிட்ரிக் அமிலம் ஆகியவற்றையும் சேர்க்கவும். காயிலுள்ள சர்க்கரை அளவு 70 சதவீதம் ஆகுமளவு சிறிது சிறிதாகச் சர்க்கரை சேர்த்து மேலே கூறியபடி கொதிக்க விட்டு இறக்கவும்.

70 சதம் சர்க்கரைப் பதம் வந்தவுடன் காயைச் சர்க்கரைப் பாகிலிருந்து பிரித்து ஒரு ட்ரேயில் பரப்பி உலர விடவும். உலர்ந்த துண்டுகளைச் சுத்தம் செய்த பாட்டில்கள் அல்லது பாலிதீன் பைகளில் நிரப்பி சீல் செய்து விடவும். இம்மாதிரி தயாரித்த கேண்டியை, கேக், பன், ரொட்டி ஐஸ்கீரிம் போன்றவை தயாரிக்கும்போது உபயோகிக்கலாம்.

**திருமதி சுசிலா திருமாறன்**
இணைப் பேராசிரியர்

**திருமதி டி. மாலதி ரவீந்திரன்**
துணைப் பேராசிரியர்

**திருமதி எம். அருணா சேரலாதன்**
துணைப் பேராசிரியர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
தோட்டக்கலைத் துறை,
கோயம்புத்தூர்-3.

# கல்லூரிக் கல்வித் துறை

## சென்னை-6

## அறிக்கை

ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளியாசிரியர்கட்கான மாநிலப் படிப்புதவித் திட்டம் 1985-86.

பொது அறிவிப்பாக தமிழ்நாடு அரசு அறிவிப்பதாவது. அங்கீகரிக்கப்பட்ட (1) ஆரம்ப, ஆரம்ப முன்னிலை, இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், (2) உடல் ஊனமுற்றோருக்கான கல்வி நிலையங்கள் மற்றும் பயிற்சிப் பள்ளிகள், (3) பாதுகாப்பு அமைச்சகத்தால் நடத்தப் பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநிலப் படிப்புதவித் திட்டத்தினை இவ்வாண்டும் தொடர்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தகுதிகள்:**—இப் படிப்புதவிக்கான முக்கிய தகுதிகளாவன :—

(1) விண்ணப்பதாரர் மார்ச்/ஏப்ரல் 1985-ல் நடைபெற்ற புதிய பத்தாம் வகுப்பு/மெட்ரிகுலேஷன்/ஆங்கிலோ இண்டியன் உயர்நிலைத் தேர்வு/தொழில் நுட்பவியல் உயர்நிலைப் பள்ளி சான்றிதழ் தேர்வு ஏதேனும் ஒன்றில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுத் தேறியிருக்க வேண்டும்.

(2) மார்ச்/ஏப்ரல் 1985-ல் நடைபெற்ற மேல்நிலைத் தேர்வில் (+2) முதல் தரம் அல்லது சராசரியாக 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(3) ஏப்ரல்/மே 1985-ல் நடைபெற்ற இளநிலைப் பட்ட வகுப்புத் தேர்வில் முதல்தரம் அல்லது சராசரியாக 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) ஏப்ரல்/மே 1985-ல் நடைபெற்ற நிறைநிலை பட்ட வகுப்புத் தேர்வில் முதல் தரம் அல்லது சராசரியாக 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(5) நடைமுறை விதிகளின்படி மாலை நேரக் கல்லூரிகளிலும் அஞ்சல்வழிக் கல்வி நிலையங்களிலும் தங்கள் படிப்பினை தொடரும் மாணவர்களுக்கு இந்தப் படிப்புதவி பெற அருகதை இல்லை. எனினும் இது தொடர்பாக அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. எனவே மாலை நேரக் கல்லூரிகளில்/அஞ்சல்வழி கல்வி நிலையங்களில் பயிலும் மேற்குறிப்பிட்ட தகுதியுடைய மாணவர்களும் தங்களது விண்ணப்பங்களை தாங்கள் கல்விபயிலும் நிலையத் தலைவர் வாயிலாக குறிப்பிடப்பட்ட தேதிக்குள் இவ்வலுவலகத்தில் விண்ணப்பங்கள் கிடைக்கும்படி அனுப்பி வைக்கலாம். ஆனால், அரசிடமிருந்து இது தொடர்பான ஆணைகள் கிடைத்த பின்னரே தேவையாயின் அவர்கள் விண்ணப்பங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(6) மேற்குறிப்பிட்ட தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

(7) இப்படிப்புதவி பெற விழையும் மாணவர்கள் உரிய காலத்திற்குள் தம் படிப்பினைத் தொடர கல்வி நியைலங்களில் சேர்க்கை கிடைக்கப் பெறாவிடினும், தேவையான சான்றுகளுடன் விண்ணபத்தை நிறைவு செய்து குறிப்பிடப்பட்ட தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். சேர்க்கை கிடைத்த பிறகு அது பற்றிய அறிக்கையினை பிறகு தனியே அனுப்ப வேண்டும்.

(8) 1985-ஆம் ஆண்டிற்கு முன்பு நடந்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்றோர் இவ்வாண்டில் விண்ணப்பிக்கத் தகுதியில்லாதவராவர்.

(9) 'இந்தியன் ஸ்கூல் சர்ட்டிபிகேட்' டிசம்பர் 1984-ல் நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களும் இந்த படிப்புதவியைப் பெற விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

(10) கல்வித் தொடர்பான நிர்வாகப் பதவிகள் மற்றும் ஆய்வு அலுவலர்களின் குழந்தைகள் இப்படிப்புதவி பெறத் தகுதி பெற்றவரல்லர்.

(3) விண்ணப்பப் படிவங்கள் அதற்கென குறிக்கப்பட்ட படிவத்தில் முழு, வெள்ளைத்தாளில் ஒழுங்கான கையெழுத்திலோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ சரியான முழுமையான தகவல்களுடன் பணிந்தனுப்பப்பட வேண்டும். மாதிரிப் படிவங்களை மாணவர்கள் தாம் இறுதியாகப் பயின்ற கல்வி நிலையத்திலிருந்தோ அல்லது கல்லூரிக், கல்வி இயக்ககம் சென்னை-6 இலிருந்தோ பெறலாம்.

(4) மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தொழில் நுட்பப் பள்ளிகளில் சேரும் மாணவர்களிடமிருந்து, நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரக் கடைசித்தேதி 16-9-1985 ஆகும். இளநிலைப் பட்ட வகுப்பு/நிறைநிலைப்பட்ட வகுப்புதொழில் கல்விகள் (சான்றாக கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை மற்றும் இதர தொழிற் கல்லூரிகள்) கல்லூரிகளில் சேரும் மாணவர்களிடமிருந்து நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசித் தேதி 30-9-1985 ஆகும்.

கல்லூரிக் கல்வி இயக்குநர்.

DIPR/27652/85-14/ASPCO.

அளவான குடும்பம் வளமான வாழ்வு



# சிந்தனை வளர்க்கும் செய்தித் தொடர்பு

மக்களாட்சி முறை செவ்வனே செயல்பட்டு வரும் நமது நாட்டில் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் பணி மிகவும் இன்றியமையாததாகும்.

அரசின் ஆக்கப்பணிகளைப் பொதுமக்கள் செவ்வனே புரிந்து கொள்ள அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்களின் ஒத்துழைப்பை நல்கச் செய்யும் மக்கள் தொடர்புச் சாதனங்களை இத்துறை சீரிய வகையில் திறம்படச் செயலாற்றி வருகிறது.

அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்கள் வெகுவாக உணர்ந்தறியும் நோக்கத்தில் மாநில அரசின் சார்பில் இத்துறை விளம்பரங்களைத் தயாரித்து வெளியிடுகின்றது.

**கள விளம்பரம்**

அரசின் வளர்ச்சிப் பணிகள் பற்றிய செய்திகளையும், மக்கள் அத் திட்டங்களில் எவ்வாறு தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் களவிளம்பரப் பணிகள் மூலம் செய்தியினை மக்களுக்கு இத்துறை எடுத்துரைக்கிறது.

மாவட்டங்களில் செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் 63 திரைப்படக் கருவிகள் உள்ளன. அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், மக்களுக்குத் தேவையான செய்திகளையும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் திரைப்படக் காட்சிகள் கிராமப் பகுதிகளில் நாள்தோறும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்ட இவ்வரசு சிறு சேமிப்பு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்ப நலம் ஆகிய திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கேற்ப வில்லுப்பாட்டு, நாடகங்கள், பொதுக்கூட்டங்கள், சிறு அளவிலான பொருட்காட்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கி வருகிறது.

**பத்திரிகைத் தொடர்பு:**

இத்துறை பொது முக்கியத்துவம் வாய்ந்த பத்திரிகைச் செய்திகளைப் பத்திரிகைகளுக்கு அளித்து வருகிறது. மேலும் செய்தி நிருபர்கள் கூட்டங்கள் அவ்வப்போது ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகின்றன.

தலைமைச் செயலரும், மற்றும் பிற துறைச் செயலர்களும் அரசின் பல்வேறு ஆக்கப் பணிகளையும், திட்டங்களின் முன்னேற்றங்களையும் வாரம் ஒருமுறை நடத்தப்படுகின்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கின்றனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொள்ளும் செய்தியாளர்கள் கூட்டங்களை இத்துறை ஏற்பாடு செய்து வருகிறது.

மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் பத்திரிகைத் தொடர்பு அலுவலராகவும் பணி புரிகின்றனர். மாவட்டங்களில் உள்ள பத்திரிகையாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாவட்டங்களில் உள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் இப்பணியினை மேற்கொண்டார்கள்.

வெளிநாட்டிலிருந்து வரும் பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சியினரும், வானொலி நிலையத்தினரும், பிற மாநிலங்களிலிருந்து வரும் பத்திரிகையாளர்களும் இம்மாநிலத்தின் பல பகுதிகளைப் பார்வையிடவும் அரசின் திட்டங்களை ஆராயவும் இத்துறை அனைத்து உதவிகளையும் செய்கிறது.

**தொலைக்காட்சி நிலையங்கள்:**

**1984-85ஆம் ஆண்டில் குறைந்த சக்தி தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் வேலூர், ஏர்க்காடு, கோயம்புத்தூர், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களிலும், சமீபத்தில் நெய்வேலியிலும் மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு கிலோவாட் சக்தி கொண்ட தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் கொடைக்கானலில் அமைக்கப்பட்டது.**

**பொருட்காட்சி:**

பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சங்களைப் பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் மக்களுக்குக் கல்வி அறிவூட்டும் சாதனமாகவும் பயன்படுகின்றன. 1973 முதல் இதுவரையில் இத்துறை 26 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. நுழைவுக் கட்டணம், அரங்கு வாடகை, உரிமைக் கட்டணங்கள், மின் கட்டணம் முதலிய வகையில் நிகர வசூல் ரூ.367 இலட்சம் இத்துறைக்கு வருமானமாக வந்துள்ளது. கட்டுமானப் பணிகள், மின் இணைப்பு, கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கான செலவு ரூ. 177 இலட்சம், பொருட்காட்சியில் பங்கு கொள்ளும் அரசுத்துறைகளும், நிறுவனங்களும், ரூ. 88 இலட்சம் செலவுசெய்துள்ளன. நிகர இலாபம் அரசுக்குச் சுமார் ரூ. 102 இலட்சம் என்ற அளவில் கிடைத்துள்ளது. நாட்டிலேயே அரசுக்கு இவ்வகையில் வருமானத்தை ஈட்டித் தருகின்ற தனிப் பெருமையுடன் தமிழ்நாடு செய்தித் துறை செயல்பட்டு வருகிறது.

நினைவகங்கள்:

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டம், அண்ணா சதுக்கம், காமராஜ் இல்லம், இராஜாஜி நினைவகம், காமராஜ் நினைவகம் ஆகியவையும், காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா இல்லம், ஈரோட்டிலுள்ள பெரியார்-அண்ணா நினைவகம், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தொரப்பள்ளியில் அமைந்துள்ள இராஜாஜி நினைவகம், தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நினைவு மண்டபம், விருதுநகரிலுள்ள காமராஜ் நினைவகம், எட்டயபுரத்திலுள்ள பாரதியார் மண்டபம், ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம், கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபம் ஆகியவையும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசின் நினைவகங்களாகும்.

**தமிழரசு**

தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியாகும் 'தமிழரசு' இதழ்கள் மூலம் அரசின் நோக்கங்களும் கொள்கைகளும் மக்களுக்காகத் தெரிவிக்கப்படுகின்றன. மாதம் இருமுறை வெளிவரும் தமிழ் இதழ்கள் சராசரி 45,000 பிரதிகளும், ஆங்கில இதழ்கள் 4,000 பிரதிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. தனியார், முகவர்கள், சந்தாதாரர்கள் மூலமும், மாவட்டங்களிலுள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமும் இந்த இதழ்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் அடங்கிய சிறப்பு மலர்களும் வெளியிடப்படுகின்றன. 'தமிழரசு' இதழ்களுடன் அவ்வப்போது இலவச இணைப்புகளும் அச்சிட்டு அவற்றுடன் வழங்கப்படுகின்றன.

'தமிழரசு' அலுவலகத்திலுள்ள வெளியீட்டுப் பிரிவு, புத்தகங்கள், துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வெளியிட்டு வருகிறது. 1984ஆம் ஆண்டில், இந்த அரசு இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எய்திய சாதனைகள் பற்றிப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் குறித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கையேடுகளை வெளியிட்டதுடன் வண்ணச் சுவரொட்டிகளையும் வெளியிட்டது. 'தமிழ்நாடு ஒரு பார்வையில்' என்ற தலைப்பிலுள்ள அழகிய வெளியீடு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு மாவட்டங்களிலுள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்



மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் தமிழரசில் தங்களுடைய விளம்பரங்களை வெளியிட்டுப் பயன் பெறுகின்றன.

1984ஆம் ஆண்டு தமிழரசு அச்சகத்தை விரிவுபடுத்துவதற்கு ரூ.6.5 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' தமிழ்-ஆங்கில இதழ்கள் இங்கு அச்சிடப்படுகின்றன.

**திரைப்படங்களுக்கு உதவித்தொகையளித்தலும், சிறந்த திரைப்படங்களுக்கும், கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்குதலும்:**

மதுவிலக்கு, சாதிமுறையைப் போக்குதல், தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் முதலிய சிறப்பான கொள்கைகளைப் பரப்பிடும் வகையில் சமூக-பொருளாதாரக் கோட்பாட்டு அடிப்படையில் தயாரிக்கப்படும் சிறந்த தமிழ்ப் படங்களின் தன்மையினை ஊக்குவிக்கும் நோக்கத்தில், சிறந்த தமிழ்ப் படங்களுக்கு 1978ஆம் ஆண்டு பிப்ரவரியில் திரைப்பட உதவித் தொகைத் திட்டம் செயலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி தரமான திரைப்படங்களிலிருந்து மிகக் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து தரமான திரைப்படங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதி உதவியினை அரசு அளிக்கிறது. 1978-79ஆம் நிதி ஆண்டு முதல் மிகச் சிறந்த கலை நுட்பமும் உயர்ந்த தொழில் நுட்பத் திறனும் கொண்ட தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் நல்கிடும் வகையில் ஆண்டுதோறும் அரசு விருதுகள் வழங்கும் திட்டம் செயலாக்கப்பட்டது. சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் பரிசுகளும், விருதுகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

ஜவகர்லால் நேருவின் நினைவாக, சிறந்த குழந்தைகள் திரைப்படங்கள் மூன்றுக்கு, மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பணமும் முதல் பரிசாகவும் மற்ற இரண்டு படங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு திரைப்பட, தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்:**

திரைப்படத் தயாரிப்பு தொலைக்காட்சி மற்றும் இவை தொடர்பான படங்கள் ஆகிய எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து



தேர்வுகள் நடத்தி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டிப்ளமாக்கள் வழங்கப்படுகின்றன. திரைப்படத் தொழிலில் காணும் சீரிய சிறப்பு அம்சங்களை அறிந்து பாராட்டும் வகையில் மக்களுக்கு அறிவுறுத்தலும் திரைப் படங்கள் குறித்து ஆய்வுகள் நடத்திட வாய்ப்பளித்தலும் இப்பயிற்சி நிறுவனத்தின் நோக்கமாகும்.

மொத்தம் 163 மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் பயில்கின்றனர்.


மாணவர்கள் தயாரித்த ('Rhetoric of Continuity') என்ற கருத்து விளக்கப்படம் இந்த ஆண்டு புதுடெல்லியில் நடந்த பத்தாவது உலகத் திரைப்பட விழாவில் பார்வையாளர்களுக்குக் காட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தியாவிலேயே இந்தப் பயிற்சி நிறுவனத்தில்தான் படச்சுருள்கள் கழுவுதல் பயிற்சியும், நடிப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு திரைப்படப் பிரிவு**

பொதுமக்களுககு அரசின் ஆக்கப்பணிகளைத் திரைப்படங்கள் மூலம் தெரியப்படுத்துவது திரைப்படப் பிரிவின் நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப் பணியையும் குடும்பநலம் மற்றும் சிறப்புமிக்க விழாக்களையும் திரைப்படம் எடுத்து மாதம் இருமுறை செய்திப் படங்களாகத் தயாரிக்கிறது இப்பிரிவு. இந்த அரசின் பல்வேறு துறைகளின் சார்பிலும் செய்திப் படங்களை இப்பிரிவு தயாரிக்கிறது. 35 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு இந்திய அரசின் திரைப்படப் பிர்வு மூலம் விநியோகிக்கப்படுகின்றன. செய்திப் படங்களும், கருத்து விளக்கப் படங்களும் 16 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு கிராமப் புறங்களில் மக்களுக்குத் திரையிடும் பொருட்டு மாவட்ட விளம்பரப்பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன.



# தாகம் தணிகிறது



தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் (சென்னை மாநகர் நீங்கலாக) நகராட்சிகள் பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களை ஆய்வு செய்யவும், திட்டங்களைச்செயற்படுத்தவும், தமிழக அரசால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14.4.71ல் ஏற்படுத்தப்பட்டது. பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை நிறைவேற்றி வந்த குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களையும் தற்போது இந்த வாரியம் செயல்படுத்தி வருகிறது.

**ஊரக குடிநீர் பற்றிய ஆய்வும் செயலும்**

தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் குடியிருப்புகளையும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் பார்வையிட்டு குடியிருப்புகளின் குடிநீர்த் தன்மை பற்றி ஆய்வொன்றினை 1976-77 ஆம் ஆண்டில் மேற்கொண்டதன் விளைவாகத் தமிழ்நாட்டில் குடியிருப்புஎல்லைக்குள் 1கிலோமீட்டர் தொலைவிற்குள் நீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகள், நீர் இருந்தும் குடிக்கத் தகுந்த நிலையில் இல்லாத குடியிருப்புகள் நல்ல நீருடைய ஆனால் ஆண்டு முழுவதும் போதிய குடிநீர் இல்லாத குடியிருப்புகள், நல்ல நீராதாரம் அமைந்த ஆனால் நீராதாரம் தனியாருக்குச் சொந்தமானது அல்லது பாதுகாக்கப்படாத குடியிருப்புகள், குடியிருப்பு எல்லையிலிருந்து 1 கி.மீ. தொலைவிற்குள் நல்ல குடிநீராதாரங்கள் அமைந்த குடியிருப்புகள் என்று கணக்கிடப்பட்டதில் தமிழகத்தில் 18167 குடியிருப்புகள் குடிநீர்ப் பற்றாக்குறை குடியிருப்புகளாய் இருப்பது தெரியவந்தது.

இத்தகைய குடியிருப்புகளின் **குடிநீர்த் தன்மை பற்றிய ஆய்வு மேற்கொண்டதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதன்மை இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.** மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்களைச்செயல்படுத்துவதில் முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று தமிழக அரசால் அறிவுறுத்தப்பட்டு 1977-78 லிருந்து 1979-80ம் ஆண்டு வரை 3,465 கிராமக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறை குடியிருப்புகளுக்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த தமிழக அரசால் முடிவெடுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தன்னிறைவுத் திட்டம்**

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சாலை வசதி. கல்விக்கூடங்கள், மருத்துவவசதி போன்ற தேவைகளை நிறைவு செய்திடும் வண்ணம் தமிழக அரசால் தன்னிறைவுத் திட்டம் என்னும் சீரிய திட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் திட்டமாக 1980ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. தன்னிறைவுத் திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு முதல் இடம் அளிக்கப்பட்டு எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறைகுடியிருப்புகளுக்கும், முதற்கட்டமாக 1980-81ஆம் ஆண்டு 69 ஒன்றியங்களிலும் இரண்டாம் கட்டமாக 1981-82ஆம் ஆண்டு 150 ஒன்றியங்களிலும் மூன்றாம் கட்டமாக 159 ஒன்றியங்களிலும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.


மேலும் பருவமழை பொய்த்தாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததாலும் சுமார் 14,826 கிராமக் குடியிருப்புகள் பற்றாக்குறை குடியிருப்புகளின் கீழ் கொண்டு வரப்பட்டது தமிழக அரசு அனைத்துப் பிரச்சினை குடியிருப்புகளுக்கும் மற்றும் 7,600 இனமாற்றம் செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கும் **6-வது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி மூன்றாண்டுகளில் முடிக்க ரூ. 17 கோடியை 1982 - 83ம் ஆண்டு தொடங்கி மூன்றாண்டு காலத்திற்கு ஒதுக்கீடு செய்யவும் ஒப்புதல் அளித்தது.**

மார்ச் திங்கள் 1983 ஆம் ஆண்டு வரை 10,157 பற்றாக்குறை குடியிருப்புகளுக்கும் 3,726 இனமாற்றம் செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 1984-85ம் ஆண்டில், திருத்திய நிதி ஒதுக்கீடான ரூபாய் 50-27கோடி செலவில் (ரூபாய் 6-30 கோடி ஆயுள்காப்பீட்டுக்கழககடன் உட்



## "பறக்கும்" தொலைநோக்கி


45 அடி நீளமான இந்த ராட்சத டெலஸ்கோப்பை பூமியில் இருந்து 590 கி.மீ. உயரே விண்ணில் நிரந்தரமாக மிதக்கவிட அமெரிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். நமது சூரியமண்டலத்துக்கு அப்பால் உள்ள கிரகங்களையும் நட்சத்திரங்களையும் கண்காணித்து தகவல் அனுப்பக் கூடிய இதற்கு எட்வின் ஹபிள் ஸ்பேஸ் டெலஸ்கோப் என பெயரிட்டுள்ளனர்.



பட) 3,574 குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டம் இடப்பட்டது.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

பருவமழை தொடர்ந்து பொய்த்தாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்தாலும் தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் கடந்த இரண்டாண்டுகளாக வறட்சி நிலவியது. வறட்சியின்போது குடிநீர்த் தட்டுப்பாட்டைப்போக்க தமிழக அரசு 20,000 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியைக்குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்தது. போர்க்கால அடிப்படையில் பணிகள் எடுக்கப்பட்டு செயலாக்கப்பட்டது.



இப்பணிகள் 1982ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் எடுத்துக் கொள்ளப்பட்டு மார்ச்சு 1983 வரை 9,688 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டது. எஞ்சியுள்ள பணிகள் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்பட்டு மேலும் 11,850கையிறைப்பான்களுடன் அமைந்த ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டது ஆக கடுமையான வறட்சியின் போது 21,538 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மக்களின் தாகம் தீர்த்திடும் பணியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சிறப்புறச் செயற்பட்டது. இதற்காக இதுவரை சுமார் ரூபாய் 45.79 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய பணிகள் முடிக்கப்பட்ட நிலையிலும் இராமநாதபுரம் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வறட்சி நிலை தொடர்ந்து நீடித்தது. தமிழக அரசு இம்மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளை தொடரும்படி ஆணை வழங்கியதால் மேலும் 454 ஆழ்குழாய்க்கிணறுகள் ரூபாய் 91.80 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.



# வளரும் தொழில்கள்

தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் இணையத்தின் விண்ணப்பத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்க இருக்கிறது. மத்திய அரசு அனுமதி அளித்ததும், புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 12 கோடி ரூபாயில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்று அமைக்கப்படும். இந்த ஆலை இயங்க 8,000 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச் சாகுபடி செய்ய வேண்டும். நாளொன்றுக்கு அந்த ஆலை 1,250 டன் கரும்பை அரைக்கும்.

ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்குக் குறைந்தது சுமார் 8 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச் சாகுபடி செய்யவேண்டும். 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தில் 10 சர்க்கரை ஆலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிய சர்க்கரை ஆலைகள் ஏற்கெனவே தமிழகத்தில் தனியார் துறையில் தொடங்கப்பட்டு இயக்கப்பட்டன. ஆனால் அவற்றில் ஒரு சில இலாபகரமாகவும், சில நஷ்டமாகவும் இயங்கி வந்தன. முறையாகத் தனியார் துறையில் நடத்தப்பட்ட சிறிய சர்க்கரை ஆலைகள் இலாபகரமாக இயங்காத நிலை ஏற்பட்டதால் மூடப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைய இருக்கும் புதிய சர்க்கரை ஆலை கூட்டுறவு ஆலையாக இயங்கும்.

ஓமலூரில் உள்ள சர்க்கரை ஆலையின் திறனை உயர்த்திடும் வகையில் ஆலையை விரிவாக்கம் செய்திட அரசு பரிசீலனை செய்யும்.

அரூரில் சர்க்கரை ஆலை அமைத்திடவும் அரசு பரிசீலிக்கும்.

சென்னை துறைமுகம் அருகே கரும் பாறைகளை மெருகு ஏற்றும் ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடும் புயலில் கூரைகள் தாக்குதல் அடையாத வகையில் அந்த ஆலையின் கூரை காங்கிரீட் பலகைகளால் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழில்கள் வளர்ந்து கொண்டு வருகின்றன.

கொடுத்த கடனைத் திருப்பிக் கட்டுவதில் இந்தியாவிலேயே இன்று முதலிடத்தில் இருக்கிறது தமிழ்நாடு - 1977-84ல் 600 புதிய பெரிய மத்திய தர தொழில்கள் உருவாகியுள்ளன. சிறுதொழில்கள் 18,789 ஆக இருந்து, 1978ல் 49,920 ஆக வளர்ந்தது. 1985ல் 60,250 ஆக உயரும்.

தொழில் துறையில் தமிழகம் பத்தாவது இடம்- பதிமூன்றாம் இடம் என்று ஏதோ புள்ளி விவரங்களை பொத்தாம் பொதுவில் பேசுகின்றனர். தொழில் உரிமம் பெறுவதில் மகாராஷ்டிரம் 334 உரிமங்கள் பெற்று முதலிடத்தில் உள்ளது. அடுத்து உத்திரப்பிரதேசம் 218 உரிமங்கள் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது. குஜராத் 176 உரிமங்கள்பெற்று 3 ம் இடத்தில் உள்ளது. 169 உரிமங்களைப் பெற்று தமிழ்நாடு 4வது இடத்தை வகிக்கிறது. மேலும் பல உரிமங்கள் பெற முயற்சித்து வருகிறது.

தொழில் தொடங்குபவர்கட்கு உதவ அரசு தயாராக இருக்கிறது. அகில இந்திய அடிப்படையில் 1970ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திக் கணக்கு விகிதத்தில் தமிழகம் 38 சதவிகிதமாக இருந்தது. 1977ல் 143 சதவிகிதமாக உயர்ந்தது. 1982ல் 213.3 சதவிகிதமாக உயர்ந்தது.

தமிழ்நாட்டில் உற்பத்தி பெருக்கம் தொடர்ச்சியாக இருக்கிறது. அகில இந்திய அளவில் பெரும்பங்கை வகிக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் மோட்டார் பாகங்களில் நாலில் ஒரு பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் சிமெண்டில் 5ல் ஒரு பங்கு தமிழகத்தில் உற்பத்தியாகிறது.

புகளூரில் துவக்கப்பட்டுள்ள காகித ஆலையில் வெளிநாட்டுக் காகிதக் கூழில் இருந்து, காகிதம் தயாரித்துப் பார்க்கப்படுகிறது. ஒரு லட்சம் டன் கரும்புச் சக்கைகள் சேமித்துவைக்கப்பட்டு இருக்கிறது. ஜூலை மாதத்திலிருந்து அங்குக் காகிதம்உற்பத்தியாகும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை சுய தேவைத் திட்ட அடிப்படையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம். இதன் முதல் கட்டமாக சிப்காட்டில் பவர் ஜெனரேட்டர் பொருத்தப்படும். 15 மெகாவாட் திறன் கொண்டதாக இது இருக்கும்.

வரியற்ற வர்த்தக மண்டலத்தில் 43 தொழில்களுக்கு உரிமம் தரப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்தத் திட்டத்தை மத்திய அரசு பாராட்டியுள்ளது.

இங்கே பல வண்ணக் கற்கள் கிடைக்கின்றன. இவற்றைப் பட்டை தீட்டி ஏற்றுமதி செய்யலாம். இப்படிப்பட்ட ஜெம் கட்டர் தொழிலை கரூர், திருச்சி போன்ற இடங்களில் அமைக்கக் கருதி இருக்கிறோம்.

ஸ்வீடன் நாட்டில் காற்றிலிருந்து காற்றாடி மூலம் மின்சாரம் தயாரிக்கிறார்கள். அவர்களிடம் இருந்து தொழில் நுட்ப உதவி கேட்டுக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

காட்பாடி அருகே வெடி மருந்துத் தொழிற்சாலை உருவாகி வருகிறது.

4 பக்கமும் மலை சூழ்ந்த அருமையான பள்ளத்தாக்கில் 21 கோடி ரூபாய் செலவில் அந்தத் தொழிற்சாலை உருவாகி வருகிறது. அதற்கு மேலும் ரூபாய் 3 கோடி செலவழித்து இப்படிப்பட்ட காற்றாடி மின்சாரத் தயாரிப்பைப் பொருத்தும்படிக் கேட்கப்பட்டிருக்கிறது.

அரசு சார்ந்த தொழில்களில் நட்டம் வருவது பற்றி ஆலோசனைக்குழு மூலம் ஆலோசனை பெற்று லாபகரமாக நடத்த முயற்சி எடுக்கப்படும். எல்லா வகையிலும் தமிழ்நாட்டில் தொழில்கள் வேகமாக உருவாகி வருகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைகள்
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கும்
அழகோவிய சேலைகள்...
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

